பக்கங்கள்: பன்னிரண்டு + IV

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 12 செவ்வாய்க்கிழமை (26.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 181

# இலங்கையின் அத்துமீறல்களை மூடி மறைக்க ஐ.நா. சபை முயற்சி

## மனித உரிமைக் கவுன்ஸிலில் அரசுக்குச் சார்பாகவே பிரேரணை

ஜெனீவா, மே 26

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்டமீறல்கள் தொடர்பாக சர்வதேச ரீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்புகளும் வலியுறுத்தி வருகின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசின் அத்துமீறல்களை மூடி மறைத்து, அதனைப் பாதுகாக்க முயல்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையின் மனித உரிமை நிலை குறித்து ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் இன்று நடைபெறுகின்ற விசேட அமர்வின்போது, இலங்கை அரசுக்குச் சார்பான பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேற்குலகம் முன்வைக்கவுள்ள இன்றைய பிரேரணை இலங்கையைப் பாராட்டுவதாக அமைகின்றது. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யுமாறு இலங்கையிடமே கோருகின்றது அந்தப் பிரேரணை.

மனித உரிமைக் கவுன்ஸிலில் பொது உடன்பாட்டைப் பெறுவதற்காக, பிரேரணையின் முக்கிய (11 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம் பெறும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நேற்று மாலை இத் தகவலைத் தெரிவித்தார்.

காலநிலை சீரில்லாத காரணத்தினால் கப்பல் சேவை சில தினங்களாக தடைப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

கப்பல் பயணம் செய்வதற்கு செயலகத்தில் அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களையும் அவசர தேவை நிமித்தம் செல்ல விருப் பவர்களை யும் இன்று காலை 7 மணிக்கு ரயில் நிலையத்திற்கு வருமாறு அவர் கேட்டுள்ளார்.

## விடுதலைப்புலிகள் ஒழித்துக்கட்டப்பட்டு விட்டார்கள்; அவர்கள் இனிமேல் எந்த விதத்திலும் புத்துயிர்பெற முடியாது

### கோத்தபாய ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, மே 26

விடுதலைப்புலிகளுக்குச் சார்பானவர்கள் பல்வேறு கருத்துக்களை பரப்பி வருகின்றார்கள். பாதுகாப்பு படையினர் விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்து விட்டார்கள். அவர்கள் இனிமேல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சரணடையக் கோரிக்கை

கொழும்பு, மே 26

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையோர், பொலிஸ் நிலையம் அல்லது இராணுவ முகாமில் சரணடைய வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகர சபைக்கும் வவுனியா நகரசபைக்கும் ஓகஸ்ட் எட்டாம் திகதியன்று தேர்தல்

கொழும்பு , மே 26

யாழ்.மாநகரசபை, வவுனியா நகரசபை உள்ளிட்ட வடக்கின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேர்தல் நடத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தலைமையில் அவரது அமைச்சில் நேற்று மாலை நடைபெற்றது. அப்போதே தேர்தல் திகதி தீர்மானிக்கப்பட்டது.

தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான அறிவித்தல் இன்று வர்த்தமானியில் வெளியிடப்பட விருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததன் பின்னர், அந்தப் பகுதியில் ஜனநாயக செயற்பாடுகளை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடவடிக்கையே இந்தத் தேர்தலாகும் என்று உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கூறினார்.

விடுதலைப் புலிகள் முன்னர் தமது கட்டுப்பாட்டினுள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பத்மநாதனை கைது செய்ய இன்ரர்போலின் உதவியை நாடுகிறது அரசு

கொழும்பு, மே 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதனை கைது செய்யுமாறு சர்வதேச இன்ரர்போல் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளது இலங்கை அரசாங்கம்.

இந்தத் தகவலை ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 4 பக்கங்கள் கொண்ட இலவச

**இணைப்பிதழ் உள்ளே**

## பாதுகாப்புக் குறித்து இன்னமும் கவலை என்பதால் அகதிகளுக்கான மனிதாபிமானப் பணிகள் தாமதம்

### மஹிந்த கூறியதாக பான் - கி - மூன் தகவல்

கொழும்பு, மே 26

"பாதுகாப்புக் காரணங்களுக்காக, நலன்புரி முகாம்களுக்கான மனிதாபிமான விநியோகங்களை மட்டுப்படுத்தவேண்டியுள்ளது என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்தார் என்று ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கூறியுள்ளார்.

டென்மார்க் நாட்டுச் செய்திச் சேவையொன்றுக்கு இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

''பாதுகாப்புக் குறித்து இன்னமும் கவலையுள்ளது என்று மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஓடுபாதைகளில் விரைவில் விமானத்தளங்கள் அமைக்கப்படும்

கொழும்பு, மே 26

முல்லைத்தீவு மற்றும் இரணைமடுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட விமான ஓடுபாதைகளை தமது தேவைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் விமானப்படையினர் பயன்படுத்தவுள்ளனர். விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் ஜானக நாணயக்கார இத் தகவலை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக்குச் சமீபமாக அமைந்துள்ள பெரிய விமான ஓடு பாதை விரைவில் அபி விருத்தி செய்யப்பட்டு விமானத் தளமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்-

கிளிநொச்சியில் ஏ-9 பாதைக்கு கிழக்கே இரணைமடுவில் அமைந்துள்ள விமான ஓடுபாதையைப் பயன்படுத்தி அங்கு சிறிய விமானத்தளம் ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் ஏழு விமான ஓடுபாதைகள் கைப்பற்றப்பட்டிருந்தன என்றும் விமானப் படைப் பேச்சாளர் மேலும் கூறியிருந்தார்.

(அ-1)

## ஐ.நாவையும் செஞ்சிலுவைக் குழுவையும் வன்னிக்கு அனுப்பக் கோருகின்றார் ரணில்

### இந்த வருடத்துக்குள் 90 வீதமான மக்களை மீளக்குடியமர்த்தவும் அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 26

வவுனியா அகதி முகாம்களில் உள்ள பொதுமக்களை வன்னியில் மீளக் குடியமர்த்துவதற்கும் வன்னியை அபிவிருத்தியடையச் செய்வதற்கும் ஐ.நா. அமைப்புகள் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றுக்கு வன்னி செல்ல அனுமதி வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் 80 முதல் 90 வீதம் வரையிலான (11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதி சக்திவாய்ந்த அணு சோதனையை பூமிக்கடியில் நடத்தியுள்ளது வடகொரியா



வட-கொரியா நேற்று நடத்திய அணுச்சோதனைக்கு ஆட்சேபனை தெரிவித்து, தென்- கொரியாவின் தலைநகரான சியோலில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. போலி வட-கொரிய ஏவுகணை, கொடிகள், அதிபர் கிம் ஜோங்- இல்லின் உருவப் படங்கள் ஆகியவற்றை ஆர்ப்பாட்டக் காரர்கள் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள்.

நொம்பெங், மே 26

வட-கொரியா பூமிக்கடியில் வெற்றிகரமாக அணுசோதனை நடத்தியுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட அணுசோதனையை விட இது அதிக சக்தி படைத்தது என வட- கொரியா இது குறித்துக் குறிப்பிட்டுள்ளது.

அதி சக்திவாய்ந்த வெடிப்பு ஒன்று இடம் பெற்றுள்ளமையை அநேக வெளிநாட்டு முகவர் நிறுவனங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. இப்பரிசோதனையை அடுத்து, நேற்று திங்கட்கிழமை, ஐ.நா. பாதுகாப்புச் சபை அவசர கூட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டது.

வட-கொரிய அரச வானொலி இப்பரிசோதனை தொடர்பான உத்தியோபூர்வ அறிக்கையொன்றை வெளியிட்டது. ''பூமிக்கடியிலான மற்றுமோர் அணுசோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது'' என அவ்வறிக்கையில் பெருமிதம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

''புதிய உச்சமட்ட நிலைப்பாட்டில் அதி சக்திவாய்ந்த அணுசோதனை நடத்தப்பட்டது. பாதுகாப்பாகவும், கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்களோடும் இது மேற்கொள்ளப்பட்டது. வட-கொரிய குடியரசின் தற்பாதுகாப்புக்கான அம்சங்களில் இதுவும் ஒன்று'' என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

''இந்த அணுசோதனையின் தாக்கம் 4.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. பூமிக்கடியில் 10 கிலோ மீற்றர் (6 மைல்) தொலைவில் இதன் அதிர்வலைகள் எழுந்துள்ளன'' என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த அதிர்வலைகள் நிச்சயமாக அணு வெடிப்பிலிருந்து கிளம்பியவை என்பதை துல்லியமாக அறியக்கூடியதாக இருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையமும் அதேபோல் தென்-கொரிய புவியியல் ஆய்வு மையமும் தெரிவித்தன.

''வட-கொரியாவின் அணுப் பரிசோதனை, சர்வதேச அமைதிக்கு ஓர் அச்சுறுத்தல். தென்-கொரியாவில் அணு நெருக்கடிகள் தொடர்பான பேச்சுகள் இடம்பெற்றுவரும் ஒரு தருணத்தில் வட-கொரியா இப்பரிசோதனையை நடத்தியுள்ளது'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

## நேபாளத்தின் புதிய பிரதமர் திங்களன்று பதவி ஏற்பு



நேபாளத்தின் புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நேபாள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாதவ் குமார் நேபாள், ஜனாதிபதி ராம்பரண் யாதவுடன் ஜனாதிபதி மாளிகை சிட்டால் நிவாஸில் இடம்பெற்ற விசேட வைபவமொன்றில் பங்குபற்றுகின்றார்.

காத்மாண்டு,மே 26

நேபாளத்தில் அரசியல் நெருக்கடிகள், இழுபறிகள் ஆகியவற்றின் மத்தியில் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாதவ் குமார் நேபாள் நேற்று திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

தலைநகரான காத்மாண்டுவிலுள்ள ஜனாதிபதி மாளிகை சிட்டால் நிவாஸில், ஜனாதிபதி ராம்பரண் யாதவ் முன்னிலையில் இப்பதவிப் பிரமாண வைபவம் நிகழ்ந்தது. நாடாளுமன்ற சபாநாயகர், நேபாளத்திலுள்ள பன்னாட்டு இராஜதந்திரிகள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# பாகிஸ்தான் ஸ்வாட் பகுதிக்குள் இராணுவம் தொடர்ந்து முன்னேற்றம்

## தலிபான் பிடியிலிருந்த பகுதிகள் மீட்பு

இஸ்லாமாபாத், மே 26

''பாகிஸ்தான் வட-மேற்கிலுள்ள ஸ்வாட் பிராந்தியத்துக்குள் நுழைந்துள்ள இராணுவம் துரிதமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குளிருந்த பல பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன'' என இராணுவத் தளபதி பிரிகேடியர் கான் தெரிவித்துள்ளார்.

''ஸ்வாட் பகுதியின் அதி முக்கிய நகரான மின்கோரா மீட்கப்பட்டுவிட்டது. நகரின் எல்லைப் பகுதிகளில் 5 ஆயிரம் தீவிரவாதிகள் சிக்கி இருப்பார்கள் என நம்பப்படுகிறது. அப்பகுதிகளில் 20 ஆயிரம் மக்களும் சிக்குண்டுள்ளார்கள். அதனால் எஞ்சிய பகுதிகளுக்கான தாக்குதல்கள் மெதுவாகவும், நிதானமாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என பிறிதொரு தளபதியான மேஜர் ஜெனரல் அத்தார் அப்பாஸ் குறிப்பிட்டுள்ளார்.

''இது பயங்கரமான - அதேவேளை ஒரு சிக்கலான நடவடிக்கை. ஏனெனில், வீடு வீடாக, தெருத் தெருவாகப் புகுந்து தீவரவாதிகள் பதுங்கியிருக்கிறார்களா? என வினவ வேண்டியுள்ளது. எவராவது பதுங்கியிருந்தால் அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. சில வேளைகளில் குடியிருப்பாளர்கள் அச்சத்தால் தகவல் தெரிவிக்க முன் வராமல் பின்வாங்கி விடுகிறார்கள். அவர்களின் தயக்கத்திலிருந்தே நாம் உண்மை நிலைவரத்தைக் கண்டுபிடித்து விடுகிறோம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்கோரா நகரில் நடைபெற்ற சண்டையில் பெருந்தொகையான தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். அவர்களின் பயிற்சி முகாம்களும், ஆயுதக் கிடங்குகளும் அழிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, ஸ்வாட் பிராந்தியத்தின் பிற பகுதிகளிலும் இராணுவம் முன்னேறி வருகிறது. இச்சண்டையையொட்டி, 15 லட்சம் மக்கள் வரை இடம்பெயர்ந்துள்ளார்கள்.

## ஆஸ்திரிய சீக்கியர் கோவிலில் மோதல்: குரு ஒருவர் பலி; 30 பேர் காயம்

வியன்னா,மே 26

ஆஸ்திரிய தலைநகரான வியன்னாவிலுள்ள ஒரு சீக்கியர் கோவிலில் பக்தர்களுக்கிடையே மூண்ட துப்பாக்கிச் சண்டையில் ஒரு குரு பலியானார். 30 பேர் காயமடைந்தனர்.

வியன்னாவிலுள்ள ருடோல்ப்செய்ம் என்னுமிடத்திலுள்ள இந்த சீக்கியர் கோவிலில்(குருத்வாரா) ஞாயிற்றுக் கிழமை திருவிழா நடந்தது. அப்போது எதிர் கோஷ்டியைச் சேர்ந்த 6 பேர் கோவிலுக்குள் புகுந்து தகராறு செய்தனர். உடனே, அங்கிருந்த பக்தர்கள் தட்டிக் கேட்டனர்.

இதைத்தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே சண்டை மூண்டது. நீளமான வாள்களால் தாக்கிக் கொண்டனர். கைத் துப்பாக்கிகளைக் கொண்டும் சுட்டனர். அதனால், கோவில் வளாகமே போர்க்களம் போல் காட்சியளித்தது.


## 59 ஆவது அகவையில் வாழ்த்துகின்றோம்



ஆசிரியை
திருமதி ஜெகவதனராசா கனகாம்பிகை
அம்பிகையம்மா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் அறம் வளர்க்கும் அன்னை 59 ஆவது அகவையிலே சுகமே அம்பாளின் அருள்பெற்றவர் இன்னும் அருளோடு எமக்கெல்லாம் நல்வழி காட்டி அன்புடன் எம்மை வழிநடத்தி நீடூழி காலம் வாழ்க வாழ்க என வாழ்த்தும்.

அருள்பேராசேப்
The Lord's Wings
Elders Home



## விழிநீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் சாரதியாகக் கடமையாற்றும் நா.குகதாசன் அவர்களின் புதல்வன்
குகதாசன் சசிதரன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டப்பணிப்பாளரும் அலுவலர்களும்,
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



## துயர் பகிர்வு

எமது கல்லூரி ஆசிரியை திருமதி M.நிர்மலா அவர்களின் அன்புத் தாய்
திருமதி விநாசி செல்லம்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.



## ஆத்ம சாந்தி திருப்பலி அழைப்பு



கடந்த 18.05.2009 அன்று கிளிநொச்சியில் இறைவனடி சேர்ந்த
அருட்தந்தை
M.T சறத்ஜீவன்
அடிகளாரின் ஆத்ம சாந்திக்கான இரங்கல் திருப்பலி இன்று (26.05.2009) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில், ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.
அடியார்கள் அனைவரும் இத்திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக செபிக்க அழைக்கிறோம்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணிதேவி மகேந்திரன்

(நூலகர், யாழ்.மாநகரசபை, நல்லூர். முன்னாள் நூலகர், நல்லூர் பிரதேசசபை நூலகர், கோப்பாய்)

மணல்தறை, திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி தவமணிதேவி மகேந்திரன் (24.05.2009 )ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

16/25,சிவன்கோயில் றோட்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0602214477

தகவல்:
செல்லையா மகேந்திரன்(கணவர்),
யாழ்.பல்கலைக்கழக மருத்துவப்பீட
தொழில்நுட்ப உத்தியோகத்தர்.

## கதிரமலைநாதன் சிகானி



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இளையதம்பி நவரத்தினம் (முன்னாள் பணியாளர், இ.போ.ச) அவர்களின் பேர்த்தியும், கதிரமலைநாதன் - நித்தியமாலா தம்பதியரின் மூத்த புதல்வியுமான சிகானி (24.05.2009) பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் கஜானி, கஸீசியன், கஜீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

TOUR-1
CIBEMARCEL CACHIN
APP 822
93700 DRANCY , FRANCE
T.P. NO: 0033872447121

தகவல்
பெரியப்பா சி.தர்மகுலராசா
பெரியம்மா-த.நித்தியகலா.

## செல்வன் குகதாசன் சசிதரன்

(மாணவன், தரம் 10, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி)



மாவடி, அல்வாய் வடக்கு அல்வாயைச் சேர்ந்த செல்வன் குகதாசன் சசிதரன் நேற்று (25.05.2009) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நாகப்பர் குகதாசன் (சாரதி,யாழ மாவட்ட செயலகம்)-மஞ்சுளா தம்பதியினரின் ஏகபுத்திரனும் சுலக்ஷனாவின் ( தரம் 9 மாணவி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை) அன்புச் சகோதரனும் அமரர் நாகப்பர், மகேஸ்வரி, பாலசுந்தரம் இராசமணி ஆகியோரின் அன்புப் பேரனும், காசி விஸ்வநாதன் சுமித்திரா (லண்டன்), மணிவண்ணன், சாரதா, அமரர் ராதா கிருஷ்ணன் (முன்னாள் சுங்க அத்தியட்சகர்), மற்றும் விஜிதா தேவி, நா.சோதிநாதன் (மதுவரி அத்தியட்சகர், யாழ்.மாவட்டம்), ஜெயவேணி, நா.தேவபாலன் (சாரதி, பிரதேச செயலகம் தென்மராட்சி), பாலாம்பிகை, நா.சண்முகதாசன் (உதவி சுங்க அத்தியட்சகர், கொழும்பு), சசிரேகா, நா.கண்ணதாசன் (அதிபர், யாழ்.வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலை), மஞ்சுளா (யா/ஞானசாரியார் கல்லூரி), நா.கந்ததாசன் (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), நந்திகா(யாழ்.நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் பெறாமகனும் தயாபரன், சுஜித்ரா(ஜேர்மனி), சிவபாலன் சாரதாதேவி, திருக்குமரன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சுசிலாதேவி(யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.05.2009) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:
நாகப்பர் குகதாசன்
(சாரதி, யாழ்.மாவட்ட செயலகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஏன் வந்தார் பான் கீ - மூன்?

இந்தியத் தமிழ் சினிமாவில் ஒரு பிரபல வில்லன் நடிகர் இருந்தார். அவர் அமரர் நம்பியார்.

இப்போதும் ஈழத் தமிழர் விவகாரத்திலும் ஒரு நம்பியார் வந்து போயிருக்கின்றார். ஐ.நா.செயலாளர் நாயகத்தின் விசேட தூதுவர் விஜய் நம்பியார்தான் அவர். அவரும் அவரது தலைமை அதிகாரியான ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ - மூனும் இலங்கை வந்து திரும்பியிருக்கின்றனர். போர்க் கொடூரங்களினால் துடித்துப்போய் நலிந்து கிடக்கும் ஈழத் தமிழினம், கடைசியாகத் தங்களைக் காப்பாற்ற வந்த கதா நாயகர்களாக இந்த பான் - கீ - மூன் மற்றும் நம்பியார் ஜோடி அமையுமோ என்ற நப்பாசையில் காத்திருந்தனர். ஆனால் அவர்கள் இருவருமோ தாங்களும் வழமையான 'வில்லன்'கள் வரிசையில் அடக்கம் என்று காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதுதான் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை வேதனை கலந்த நிஜமாகும்.

கொடூரப் போரியல் குற்றங்களும், மனிதப் பேரழிவுகளும் இடம்பெற்ற ஒரு தேசத்துக்கு, அதுவும் அந்தக் கொடூரங்களின் இரத்தவாடை இன்னும் அடங்கிவிடாத நிலையில் - அந்தப் பேரனர்த்தம் இடம்பெற்ற கையோடு - உலக நாடுகளின் பொதுமன்றம் என்று கூறப்படும் ஐ.நாவின் தலைமை அதிகாரி நேரில் வந்து நிலைமைகளைப் பார்வையிட்டிருக்கின்றார். ஆனாலும் -

தமது அவதானிப்புத் தொடர்பாக ஊடகங்களின் சந்தேகங்களுக்குப் பதில் அளிக்க வேண்டிய ஐ.நா. செயலாளர் நாயகம், செய்தியாளர்களுடனான கேள்வி - பதில் அமர்வைத் தவிர்த்துக் கொண்டார்.

ஒரு சில வாரங்களில் பல்லாயிரம் பேரின் - அவர்களில் பெரும்பான்மையினர் அப்பாவிப் பொதுமக்கள் - உயிர்களைக் காவு கொண்ட இந்தப் பேரனர்த்தத்தைக் குறைந்த பட்சம் 'இரத்தக் களரி' என்று அழைப்பதைக் கூட அவர் தவிர்த்துக்கொண்டார்.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இரண்டு நாள் இலங்கை விஜயத்தை ஒட்டி அவருடன் கூட வந்த சர்வதேச செய்தியாளர்களுக்குக் கூட இங்கு இரண்டு நாள்கள் மட்டுமே தங்குவதற்கு 'வீஸா' வழங்கப்பட்டது. அதற்கு அப்பால் ஓரிரு தினங்கள் இலங்கையில் தங்கி நிலைமையைப் பார்வையிட அவர்களுக்கு அனுமதியும் 'வீஸா' நீடிப்பும் மறுக்கப்பட்டன. ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் கூட வந்து, அவர் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை மட்டும் சேகரித்துக் கொண்டு அவருடனேயே திரும்பிச் செல்ல அந்தச் செய்தியாளர்கள் பணிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஓரிரு நாள் 'வீஸா' நீடிப்பை இங்கு பெற்றுக் கொடுக்கக் கூட ஐ.நா. அதிகாரிகளால் முடியவில்லை.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜய முடிவில் அவர் இலங்கை அரசுடன் சேர்ந்து விடுத்த கூட்டறிக்கையில் முக்கியமான பல அம்சங்கள் - இலங்கையில் பற்றியெரியும் நெருப்புப் போன்ற - பல விடயங்களைக் காணோம். குறிப்பாக, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடைசிநேரம் வரை இருந்து, உயரிய மருத்துவப் பணியாற்றி, உண்மைக் கள நிலைவரத்தை உலகுக்கு அம்பலப்படுத்திய மூன்று தமிழ் டாக்டர்களின் கதியும் மர்மமாக உள்ளது. அதுபற்றியோ அல்லது இலங்கையில் மிக மோசமான அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் ஊடக சுதந்திரம் குறித்தோ அல்லது மிக அவசர, அவசிய மனிதாபிமான உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பல லட்சம் தமிழ் அகதிகளைச் சென்று சந்திக்கத் தொண்டுப் பணியாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது பற்றியோ தமது கூட்டறிக்கையில் ஐ.நா. செயலாளர் நாயகம் எதுவுமே பிரஸ்தாபிக்கவேயில்லை.

இலங்கையில் கொடூரப்போருக்கு வழி செய்தது இனப் பிரச்சினையே. பெரும்பான்மையினரான பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, நசுக்கி வந்ததன் விளைவாகவே இக் கொடூரப் போர் நிலைமை உருவாகி பேரழிவுக்கு வழி செய்தது என்பது பகிரங்க உண்மை. யுத்தப் பேரழிவுகள் மூலம் சிறுபான்மையினரான தாங்கள் அடக்கி, ஒடுக்கப்பட்டனர் என்றும், இந்த ஒடுக்குமுறையின் உச்சமாகத் தாங்கள் தொடர்ந்தும் - யுத்தம் முடிவுற்று விட்டதாக அரசுத் தரப்பினால் அறிவிக்கப்பட்ட பின்னரும் - நசுக்கப்பட்டு, அகௌரவப்படுத்தப்பட்டு கேவலமாக நடத்தப்படுகின்றனர் என்பதுமே ஈழத் தமிழர்களின் பிரதான குற்றச்சாட்டும் மன ஆதங்கமுமாகும்.

இந்தப் பிரச்சினையைக் கவனத்தில் எடுத்து, தமிழர்களுக்கு நியாயம் செய்யும் நடவடிக்கைகளை நடுநிலையோடு முன்னெடுக்க வேண்டிய பொறுப்பிலும், கடமையிலும் இருக்கின்றார் ஐ.நா. செயலாளர் நாயகம்.

அவர் அதைச் செய்யவேயில்லை. அதைச் செய்ய வக்கற்றவராக - பலமற்றவராக - அவர் இருந்திருக்கலாம். ஆனால் குறைந்த பட்சம், இந்தப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டு, இனவழிப்புக் கோரத்துக்கு இலக்காகியிருக்கும் ஒரு சிறுபான்மை இனத்தின் மன ஆதங்கங்களையாவது அவர் பொறுமையோடு செவிமடுத்திருக்கலாம். அதைக்கூட அவர் செய்யவில்லை. தமிழர் தரப்பை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்திக்கத் தமது நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கிக் கொடுத்த அவர், அந்தப் பிரதிநிதிகளை சந்திக்காமலேயே - அவர்களுக்கு முகம் கொடுக்காமலேயே - நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கவும், அவர்கள் கூறுவதை செவிமடுக்கவும் கூடத் தயாரில்லாத தமது செயற்பாட்டின் மூலம் தமது கவனிப்பும், சிந்தனையும், சேவையும் உலகின் அரசுக் கட்டமைப்புகள் என்ற ஆட்சி அதிகாரங்களின் நலனை நோக்கியதே என்பதை வெளிப்படுத்திச் சென்றிருக்கிறார் ஐ.நா. செயலாளர் நாயகம்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், இலங்கைத் தமிழர்கள் பெரும் போரினால் கொடுமையில் சிக்கித், திணறி, திண்டாடி, அவஸ்தைப்படும் இச்சமயத்தில் இங்கு வந்த ஐ.நா. செயலாளர் நாயகம், அந்த மக்களின் உடனடி மீட்சிக்கு வழி ஏதும் செய்யாமல், இலங்கை அரசின் தலைமையை தாஜா செய்யும் வகையில் வெறுமனே 'வந்தார்; பார்த்தார்; சென்றார்' என்ற அளவோடு பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கின்றார். அவ்வளவே. இவற்றுக்காக இவர் பெரும் ஆலாபரணம் செய்து இங்கு வந்திருக்க வேண்டியதில்லையே!.....

# மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும்

## பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா தெரிவிப்பு



கொழும்பு,மே 26

மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினாலும், அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கான சட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் சரத். என்.சில்வா கூறினார்.

குருநாகல் உயர்நீதிமன்றத்தில் நேற்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதம நீதியரசர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

எமது நாட்டில் சட்டம் செயற்படாத இடத்துக்கு நான் அண்மையில் விஜயம் செய்திருந்தேன். வடக்கு, கிழக்கிலுள்ள சில நீதிமன்றங்களில் புலிகளால் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன.

அந்த நீதிபதிகளை நீக்கிவிட்டு முக்கியமான பதவிகளுக்கு திறமை வாய்ந்த நீதிபதிகளை நான் நியமித்துள்ளேன். அந்தப் பகுதிகளில் தமிழ் நீதிபதிகளுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்கியுள்ளோம்.

வெளிநாடுகள் எமது நாட்டைப் பற்றி மிகவும் தாழ்வான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளமை கவலையளிக்கிறது. எமது நாட்டைப் பற்றி பல்வேறு தொலைக்காட்சிகளில் பிழையான தகவல்கள் வெளியாகியுள்ளமையே அதற்கான காரணம்.

நீதிமன்றங்களை அபிவிருத்திசெய்ய வெளிநாடுகளிடம் நாங்கள் உதவி கோரினால், அவர்கள் அதற்கு இயலாதெனக் கூறுவதுடன், வடக்கு கிழக்கு அபிவிருத்திக்குப் பணம் தருவதாக அவர்கள் கூறுகின்றனர்

அவ்வாறிருந்தும் பெற்றுக்கொண்ட நிதியுதவிகளிலிருந்தே யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கண்டியிலுள்ள நீதிமன்றக் கட்டடத்தொகுதிகளை நாம் கட்டிமுடித்தோம்.

தற்பொழுது இந்த நீதிமன்றக் கட்டடத்தொகுதிகளுக்கு எம்மால் செல்ல முடியும். தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என நினைப்பதற்கு நாம் இடமளிக்கவில்லை. இந்தப் பகுதிகளில் தமிழர்களை நாம் நீதிபதிகளாக நியமித்துள்ளோம். யாழ்.நீதிமன்றமும் இலங்கையிலுள்ளதொரு நீதிமன்றம் என்ற எண்ணத்தை நாம் தோற்றுவித்துள்ளோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தடையின்றி அகதி முகாம்களுக்குள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு, மே 26

சர்வதேசத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் எவ்வித தடையுமின்றி அகதி முகாம்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை இதற்கு உரிய வகையில் அழுத்தம் கொடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை நிலவரம் குறித்து இன்றைய தினம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் விவாதம் நடத்தப்படவிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் துயரங்களை எதிர்நோக்கிவரும் அப்பாவிப் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

சர்வதேசத் தொண்டு நிறுவனப் பணியாளர்களை அகதி முகாம்களுக்கு அனுமதிப்பதன் மூலம் அப்பாவி மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியும் என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், துணை இராணுவக் குழுக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நீண்டகாலமாக மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்த இந்த அமர்வுகள் வழிகோலும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் ஸாம் சரிப்ப தெரிவித்துள்ளார்.

யுத்த வலயத்தில் சிக்கி தற்போது இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள 250,000 அப்பாவி பொதுமக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லலுறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகமானோர் மோதல்களினால் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும், உணவுமருந்துப்பொருள்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது அவதியுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல்கள், கப்பம் கோரல், படுகொலைகள், பலவந்தமான ஆட்சேர்ப்பு, பாலியல் துன்புறுத்தல்கள் என இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைப் பட்டியல் நீண்டுகொண்டே செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (50)

# வவுனியா நிவாரணக் கிராமங்களில் பெற்றோரை இழந்த பல சிறுவர்கள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, மே 26

வவுனியா நிவாரணக் கிராமங்களில் பெற்றோரை இழந்த பல சிறுவர்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து கடந்த சில மாதங்களாக அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்தவர்களில் பெற்றோரை இழந்த சிறுவர் கள் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் ஜகத் வெல்லவத்த கூறினார்.

பெற்றோர்கள் உயிருடன் இருக்கின்ற போதிலும், அவர்களை தவறவிட்ட அநேகமான சிறுவர்களும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பெற்றோரும் பிள்ளைகளும் வெவ்வேறு முகாம்களில் தங்கியுள்ளனரா என்பது தொடர்பாகவும், ஆராய்ந்து வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

பெற்றோரை இழந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களின் எதிர்கால பாதுகாப்பினை கருத்திற் கொண்டு விசேட செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கமைய நடைமுறையிலுள்ள சுனாமி பேரலை சட்டத்தின் பிரகாரம் அந்த சிறுவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் அவர்களை ஒப்படைக்க திட்டமிட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஜகத் வெல்லவத்த மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை வன்னியில் நடந்தேறியுள்ள மனிதப் பேரழிவின் போது குறைந்தது 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெற்றோரை இழந்த குழந்தைகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தக் குழந்தைகளில் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளே பெருமளவானோர் எனவும் மற்றயவர்கள் தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழநதைகள் குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேசத் தரப்புக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தல்கள் எழுந்துள்ளன.

# மனிதாபிமான உதவிகளை முடக்கும் இலங்கைக்கு சுகாதார ஸ்தாபனத் தலைமைப் பதவி பொருத்தமற்றது

## ஐ.நா.கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

ஜெனீவா, மே 26

வன்னி அகதிகளுக்கு அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்க முடியாத வகையில் முடக்கும் இலங்கைக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமைப் பொறுப்பு பொருத்தமற்றதென ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதற்குப் பொருத்தமற்றவர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொண்டு நிறுவனங்களுக்கான அனுமதி வரையறுக்கப்பட்டுள்ள காரணத்தினால் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி அகதிகள் பெரும் துயரங்களை எதிர்நோக்கி வருவதாக ஜெனீவாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் யூ.என். வோட்ச் அமைப்பு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் 193 உறுப்பு நாடுகளும் இந்த விடயம் குறித்து அழுத்தம் கொடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு மனிதாபிமான நிவாரணங்களை வழங்கவிடாது தடுக்கும் ஓர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சருக்கு உலக சுகாதார ஸ்தாபானத்தின் தலைமைப் பதவி வழங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை அப்பாவிப் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை நிவாரணங்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் முதன்மை கடமை என்பதனை வலியுறுத்துவதாக யூ.என். வோட்ச் எனப்படும் ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹிலல் நியூயர் தெரிவித்துள்ளார்.

அகதி முகாம்களில் சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவை குறித்து கவனம் செலுத்தாத ஓர் உலக சுகாதார ஸ்தாபனத் தலைவரின் கடமைதான் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 13 | 27.05.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.ப. 11.53 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | பி.ப. 03.05 வரை |
| சுபநேரம்: | 04.22 - 05.52 |
| ராகுகாலம்: | 11.52 - 01.22 |

# கிழக்குப் பல்கலைக் கழகம் முதலாம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மே, 26

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தின் சகல பீடங்களின் விரிவுரைகளும் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

விடுமுறையில் சென்றுள்ள வெளி மாவட்ட விவரங்களை மாணவர்கள் கிழக்குப் பல்கலைக்கழக கலாசார பீடாதிபதியுடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அமைச்சரவை இன்று விரிவாக்கம்

## கூட்டணிக் கட்சிகளுடன் காங்.ஆலோசனை

புதுடி.ல்லி, மே 26

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவை இன்று விரிவுபடுத்தப்படுகிறது. புதிய அமைச்சர்கள் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் பிரதமர் மன்மோகன் சிங் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இது தொடர்பாகக் கூட்டணிக் கட்சிகளுடன் காங்கிரஸ் ஆலோசனை நடத்தி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து, மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் ஆட்சியமைத்துள்ளது.

பிரதமராக மன்மோகன் சிங் கடந்த 22ஆம் திகதி பதவியேற்றார். அவருடன் அமைச்சுப் பதவி அந்தஸ்துள்ள அமைச்சர்களாக 19 பேர் பதவியேற்றனர். இதில் பிரணாப் முகர்ஜி, எஸ்.எம்.கிருஷ்ணா, ப.சிதம்பரம், சரத்பவார், மம்தா பானர்ஜி, ஏ.கே.அந்தோணி ஆகியோருக்கு அமைச்சுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மற்றத் துறைகள் பிரதமரிடமே உள்ளன.

மத்திய அமைச்சரவை இன்று விரிவுப்படுத்தப்படும் என்றும், இன்று அமைச்சர்களின் அமைச்சுகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படும் என்றும் பிரதமர் மன் மோகன் சிங் தெரிவித்தார். அதன்படி, மத்திய அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

காங்கிரஸில் இன்னும் எத்தனை பேருக்கு அமைச்சர் பதவி அளிப்பது, யாருக்கு என்ன அமைச்சு ஒதுக்குவது என்பது குறித்து சோனியாவுடன் பிரதமர் மன்மோகன் சிங் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார். கூட்டணிக் கட்சித் தலைவர்களுடனும் காங்கிரஸ் தலைவர்கள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸுக்கு அமைச்சரவையில் மேலும் 5 இடங்கள் வழங்க காங்கிரஸ் சம்மதித்துள்ளது. அதேபோல் சரத்பவாரின் தேசியவாத காங்கிரசுக்கு மேலும் 2 இடங்கள் வழங்கவும் பிரதமர் முடிவு செய்துள்ளார்.

மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தருவோம் என்று தி.மு.க. அறிவித்தது. அமைச்சரவையில் தி.மு.க. சேர வேண்டும் என்று பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்த முதல்வர் கருணாநிதி, அமைச்சரவையில் தி.மு.க. பங்கேற்பது பற்றி கட்சியினருடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

மத்திய அமைச்சர்கள் பட்டியலை தயாரிக்கும் பணியில் பிரதமர் மன்மோகன் சிங்கும் காங்கிரஸ் தலைவர் சோனியாவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விரிவாக்கத்துக்குப் பின்னர் அமைச்சரவையின் பலம் 65 ஆக இருக்கும் என்று தெரிகிறது.




# ஐ.நாவில் இலங்கை ஆதரவு நிலையை இந்திய அரசு உடன் கைவிட வேண்டும்

## ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை, மே 26

இலங்கை அரசுக்கு ஆதரவான நிலையை இந்தியா கைவிடுவதற்கு முதல்வர் கருணாநிதி வலியுறுத்த வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு -

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் தமிழ் மக்களை கொலை செய்த இலங்கை ஆட்சியாளர்கள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் வலுப்பெற்று வருகிறது.

அதற்கு முதல் படியாக இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் விசாரணை மேற்கொள்ள உள்ளது. ஜேர்மனி விடுத்த வேண்டுகோளை ஏற்று இக்கூட்டம் அவசரமாகக் கூட்டப்படுகிறது. கனடா, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து உள்ளிட்ட 17 நாடுகள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

போராளிகளுக்கு எதிரான போர் என்று உலகத்தை ஏமாற்றிக் கொண்டு, இலங்கைப் படையினர் நடத்திய இனப் படுகொலைக்கு உரிய விலையை அவர்கள் கொடுத்தே ஆக வேண்டும். இது உலகத் தமிழர்களின் உணர்வாகும்.

இதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். இலங்கைக்கு ஆதரவான நிலையை கைவிட்டு, இலங்கை ஆட்சியாளர்களை தண்டிப்பதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் நடைபெறும் விசாரணைக்கு முழு ஆதரவு தர வேண்டும்.

டில்லியில் 2 தினங்கள் முகாமிட்டிருந்த தமிழக முதல்வர் கருணாநிதி இதுதொடர்பாக இந்திய அரசுடன் பேச்சு நடத்தினாரா? சென்னையில் தன்னை சந்தித்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனுடன் பேசினாரா? என்பவை போன்ற கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு ஆதரவான நிலையை இந்தியா கைவிட வேண்டும் என கருணாநிதி வலியுறுத்த வேண்டும். இன்றைய காலகட்டத்தில் அவரது முக்கிய பணி இதுவாகத்தான் இருக்க வேண்டும் - என்றுள்ளது.

# விடுதலைப்புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கு தமிழகத்துக்கு நவீன கங்காதேவி கப்பல் வருகை!

சென்னை, மே 26

தமிழகக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க கங்காதேவி என்ற அதிநவீன கப்பல் நேற்று முன்தினம் காலை சென்னை துறைமுகத்துக்கு வந்தது.

இந்தியக் கடலோர காவல் படையினரால், கங்காதேவி என்ற நவீன கப்பல் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இக்கப்பல் கொல்கத்தாவில் கடந்த 1990ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 45 மீற்றர் நீளம், 7 மீற்றர் அகலம் கொண்டது. எடை 195 தொன். அந்தமான் கடலோரப் பகுதியில், பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கங்காதேவி கப்பல் நேற்றுமுன்தினம் காலை சென்னை துறைமுகம் வந்தது. இனிமேல் தமிழகக் கடலோரப் பகுதிகளில் தீவிர பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படும்.

இலங்கையில் இருந்து விடுதலைப் புலிகள் தமிழகத்துக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளதால் தீவிர ரோந்து பணியில் இக்கப்பல் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து துறைமுகத் தலைவர் சுரேஷ் கூறியவை வருமாறு -

கங்காதேவி கப்பல், முதல் முறையாக சென்னைக்கு வந்துள்ளது. துறைமுகத்துக்கும் கடலோரக் காவல் படைக்கும் உருவான ஒப்பந்தப்படி கடலோரப் பாதுகாப்புப் படைக்கு என்று துறைமுக தளம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இந்த துறைமுக தளத்தில் சிறிய, பெரிய கப்பல்களை நிறுத்தலாம். தீவிரவாதிகள் ஊடுருவல், கடத்தலைத் தடுப்பது, கடலில் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றுவது போன்ற பணிகளில் கங்காதேவி கப்பல் ஈடுபடும் - என்றார்.

கிழக்கு மண்டல கடற்படை கொமாண்டர் பஸ்ரா உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள் உடனிருந்தனர்.



தமிழகக் கடலோரப் பகுதிகளில் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக விமானத்தைச் சுட்டு வீழ்த்தும் பீரங்கி பொருத்தப்பட்ட அதிநவீன கங்காதேவி கப்பல் சென்னை துறைமுகத்துக்கு நேற்றுமுன்தினம் வந்தது. அதன்போது எடுக்கப்பட்ட படம் இது.

# வங்கக்கடலில் புயல் அறிகுறி; தமிழகத்தில் பரவலாக மழை

## இரண்டு நாள்கள் தொடரும் என எச்சரிக்கை

சென்னை, மே 26

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளதால், தமிழகம், புதுச்சேரியில் 2 நாள்களுக்கு காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் அந்தமான் அருகே கடந்த சனிக்கிழமை மாலை குறைந்த காற்றழுத்தம் உருவானது. இதனால் அந்தமான், இலங்கை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை மழை பெய்தது. அந்தக் குறைந்த காற்றழுத்தம் மேலும் வலுப்பெற்று நேற்றுமுன்தினம் இரவு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்தது. இதனால் தமிழக கடலோரத்தில் நேற்றுமுன் தினம் இரவு நல்ல மழை பெய்தது.

இதற்கிடையே தென்மேற்கு திசையில் இருந்து பலத்த காற்று வீசத் தொடங்கியது. இதனால் அந்த குறைந்த காற்றழுத்தம் மேலும் வலுப்பெற்று குறைந்த காற்றழுத்தம் தாழ்வு மண்டலமாக மாறியது. இதனால் கடல் சீற்றம் அதிகரித்தது. சென்னை, நாகப்பட்டினம், பாம்பன், கடலூர் மற்றும் புதுச்சேரி துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை முதலாம் எண் கொடி ஏற்றப்பட்டது.

கடல் காற்று மணிக்கு 45 - 55 கி.மீ. வேகத்தில் வீசும் என்பதால், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டனர்.

தமிழகம், புதுச்சேரியில் சூறாவளிக் காற்றுடன் நேற்றுமுன்தினம் காலை மழை கொட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு நோக்கி நகர்ந்து ஒரிசாவுக்கு கிழக்கே 400 கி.மீ. தொலைவில் வங்கக் கடலில் புயலாக மையம் கொண்டது. சென்னை, புதுச்சேரியில் கடும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. புயல் நேற்றுமுன்தினம் வடக்கு நோக்கி நகர்ந்தது.

இப்போது தென்மேற்கு பருவ மழை தொடங்கியுள்ளதால் கேரளாவில் நல்ல மழை பெய்யும் வாய்ப்புள்ளது. ஆனால், தமிழகத்தில், வரண்ட வானிலை காரணமாக வெப்ப சலனம் ஏற்பட்டு 2 நாள்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# புலிகள் வருகின்றனர் என்ற தகவலால் தூத்துக்குடியில் கண்காணிப்பு தீவிரம்

தூத்துக்குடி., மே 26

இலங்கையின் முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து 2 படகுகளில் விடுதலைப் புலிகள் வருகின்றனர் எனத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்துவிட்டது என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து 2 படகுகளில் விடுதலைப் புலிகள் வருகின்றனர் என தூத்துக்குடி மாவட்ட பொலிஸாருக்கு 2 தினங்களுக்கு முன் தகவல் கிடைத்தது.

மேலும், கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இலங்கையைச் சேர்ந்த படகு ஒன்று வந்தது எனவும் தகவல் வெளியானது.

இந்தத் தகவல்களைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடலோர பாதுகாப்புப் படையினர் கப்பல்கள் மூலம் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல கடலோர பாதுகாப்புக் குழும பொலிஸார் மற்றும் உள்ளூர் பொலிஸார் கடற்கரைப் பகுதியில் 24 மணி நேர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழ் இன விரோதப் போக்கை இந்தியா உடன் கைவிட வலியுறுத்துகிறார் திருமா

சென்னை, மே 26

தமிழின விரோதப் போக்கை இந்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இனப் படுகொலை மனிதநேயத்தையோ, அனைத்துலக மரபுகளையோ துளியளவும் பின்பற்றாமல் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் திட்டமிட்ட தமிழினப் படுகொலையை நடத்தினர். கடந்த சில நாள்களுக்கு முன் இறுதிப் போர் எனும் பெயரில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மொத்த நிலப் பரப்பையும் கைப்பற்ற வேண்டும் என்ற வெறியில் உலக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் ஒரே நாளில் ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்துலக போர் மரபுகளை மீறி போர்க் குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறார் என அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகள் எல்லாம் ஒருங்கிணைந்து ஐ.நா. பேரவையில் உள்ள மனித உரிமைகள் பாதுகாப்புப் பேரவையின் சிறப்புக் கூட்டம் ஒன்றை இன்று நடத்தவுள்ளனர்.

பாகிஸ்தான், சீனா, இந்தோனேசியா, கியூபா மற்றும் அரபு நாடுகள் உள்ளிட்ட பல் வேறு நாடுகள் அது உள்நாட்டுப் பிரச்சினை என்று இலங்கை அரசுக்குப் பொருளாதார உதவிகள் செய்ய அனைத்துலக நாடுகளை வலியுறுத்துகின்றன.

குறிப்பாக இந்திய அரசு சிங்கள ஆட்சியாளர்களுக்கு உதவுவதில் மிகத் தீவிரமாக உள்ளதை அறிய முடிகிறது. இந்திய அரசின் இத்தகைய போக்கு ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கும் செய்கின்ற மாபெரும் துரோகமாகும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக பாடசாலைகளில் சிறந்த ஆசிரியர்வளம் உள்ளது மாணவர்கள் அதனை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும்

## வலயக்கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் உரை

யாழ்ப்பாணம், மே 26

தீவக வலயப் பாடசாலைகளில் இன்று சிறந்த ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களில் பலர் யாழ்ப்பாண நகரத்திலே பிரபலமான தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களாகவும் உள்ளனர். இவர்களின் கற்பித்தல் திறமையை இங்குள்ள மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி தமது கற்றல் பேறுகளை உயர்த்திக்கொள்ள வேண்டும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஜீ.சி.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதற்கான நிகழ்வு வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையின்போது தெரிவித்தவை வருமாறு:-

இன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்விநிலை வீழ்ச்சியடைந்துள்ளது என்பது உண்மைதான். எனினும் இன்று வவுனியா தெற்கு வலயத்திலே கல்வி நிலை உயர்வாக இருப்பதற்கு யாழ்.மாவட்ட மாணவர்களே காரணம். அதேபோலவே இங்கு தீவக வலயத்திலும் 1990இன் பின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கும் இடப்பெயர்வு ஒரு காரணமாகும். 1990இல் தீவுப் பகுதியை விட்டு இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்த வர்கள் பலர் மீளக்குடியேறவில்லை. இதனால் தீவக வலயத்தில் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ளது என்றாலும் நாம் இங்கு தங்கியுள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

தீவக வலயத்தில் சிறந்த ஆசிரியர் வளம் உள்ளது. இவர்கள் பலர் சிறந்த தனியார் கல்வி ஆசிரியர்களாகவும் உள்ளனர். இங்குள்ள மாணவர்கள் இவர்களின் கற்பித்தல் திறமையை சிறந்த முறையில் பயன் படுத்தி கல்வியில் உயர வேண்டும் - என்றார்.

(50-267)

# சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா நாளை.

நல்லூர், மே 26

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாநகரசபை ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கலந்து கொள்வார்.

பரிசில்கள் பெறும் மாணவர்கள் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(50-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# போதனா வைத்தியசாலையில் 'எக்ஸ்றே' பிரிவுக்கு அருகில் உள்ள பொது மலசலகூடம் மூடப்பட்டது

## நோயாளர்கள், பொதுமக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.போதனா வைத்தியசாலையின் 'எக்ஸ்றே' பிரிவுக்கு அருகில் உள்ள பொது மலசலகூடம் பாவிக்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளமையால் அதற்கு அருகில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இந்தப் பொது மலசலகூடம் பூட்டுப் போடப்பட்டு மூடப்பட்டுள்ளது.

இதனால் அருகில் உள்ள மற்றைய பொது மலசல கூடத்தையே மக்கள் பாவித்து வருகின்றனர்.

வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிட வருவோரும் மற்றும் நோயாளர்களுடன் கூடத் தங்குவோரும் அவசர தேவை கருதி இந்த மலசல கூடத்தைப் பயன்படுத்தி வந்தனர். இது தற்போது மூடப்பட்டுள்ளமையால் நோயாளர்களும், வைத்தியசாலைக்கு வருவோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(50-224)

# துரையப்பா விளையாட்டரங்கின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மைதானப் பகுதி துப்புரவு செய்யப்படுவதுடன் மைதானத்தில் மழை காலங்களில் வெள்ளம் வழிந்தோடுவதற்கு வசதியாக [illegible] தற்போது நடைபெற்று வருகின்றன.

அத்துடன் குழாய்க்கிணறு மற்றும் மலசல கூட வசதிகள் போன்றவற்றை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் பார்வையாளர் அரங்கிற்கு [illegible]ணம் பூசும் பணி நடைபெறுகின்றது.

(50-224)

# திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலகத்துக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறியின் இவ்வாண்டுக்கான 16 ஆவது புதிய பிரிவு அடுத்த மாதத்தில் ஆரம்பமாக வுள்ளதால், இப்பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகமும் அரங்கியலும் தொடர்பான அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கியதாக அமையும் இப்பயிற்சி நெறிக்கு நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களும், க.பொ.த.சாதாரண தரத்திற்கு மேல் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்பாக ''இணைப்பாளர், திருமறைக் கலாமன்றம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு நேரிலோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. 16 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள எவரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-9)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மே மாத நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், மே 26

உலக உணவுத் திட்டத்தின் கீழ் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மற்றும் 11.08.2006 இற்கு பின்னர் இடம் பெயர்ந்தோருக்கான மே மாதத்துக்குரிய நிவாரணம் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த விநியோகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்திற்கு அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, மரக்கறி எண்ணெய் போன்ற பொருள்கள் வழங்கப்படவுள்ளன. குடும்ப உறுப்பினர்களுக்கான மே மாத விநியோக அட்டவணை வருமாறு:

| பொருள் விபரம் | 1 அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் | 6 அங்கத்தவர் | 7 அங்கத்தவர் | 8 அங்கத்தவர் | 9 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி (கிலோ கிராம்) | 9.800 | 19.600 | 29.400 | 39.200 | 49.000 | 58.800 | 68.600 | 78.400 | 88.200 |
| கோதுமை மா (கிலோ கிராம்) | 1.400 | 2.800 | 4.200 | 5.600 | 7.000 | 8.400 | 9.800 | 11.200 | 12.600 |
| பருப்பு (கிலோ கிராம்) | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 | 10.080 | 11.760 | 13.440 | 15.120 |
| சீனி (கிலோ கிராம்) | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| மரக்கறி எண்ணெய் (கிலோ கிராம்) | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| மொத்தம் (கிலோ கிராமில்) | 14.000 | 28.000 | 42.000 | 56.000 | 70.000 | 84.000 | 98.000 | 112.000 | 126.000 |

# இரண்டு இலட்சத்து 32 ஆயிரம் கிலோ வெங்காயம் 5 ஆவது தடவையாகக் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

மானிப்பாய், மே 26

யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனம் ஐந்தாவது முறையாக இரண்டு லட்சத்து 32 ஆயிரம் கிலோ வெங்காயத்தை கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளது.

தேசவள விவசாயிகள் சம்மேளன வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

குடாநாட்டு விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ வெங்காயம் 40 ரூபா என்ற விலையில் பெறப்பட்டு அதனை உரிய முறைப்படி கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது எனவும் ஐந்தாவது முறையாக 19 லொறிகளில் 2 இலட்சத்து 32 ஆயிரம் 150 கிலோ நல்லரக வெங்காயம் கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் 64 பைகளில் பனை உற்பத்தி பொருள்களும், 10 பைகளில் மாம்பழங்களும் மற்றும் இறால், நண்டு, சங்கு, மீன் போன்ற கடலுணவுகளும் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் யாழ்.குடாநாட்டு உற்பத்தி பொருள்களை காலத்திற்கு காலம் உரிய பதனிடல் முறைகளின் கீழ் அனுப்பி வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை -

ஐந்தாவது முறையாக ஏ - 9 வீதி வழியாக அனுப்பப்பட்ட யாழ்.குடாநாட்டு உற்பத்தியில் 2 இலட்சத்து 48 ஆயிரத்து 650 கிலோ எடையுள்ள பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-95)



திருநெல்வேலி கருணாலயம் சிறுவர் இல்லத்தில் [illegible] கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கண்காட்சியின் [illegible] பொருள்களை மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட மேற்பார்வையாளர் திரு. முருகேசு எசேக்கியேல் அவர்களின் சேவை நலன் பாராட்டு சிறப்புமலர்

## ஆசியுரை



அவனருளாலே அவன் தாழ்வணங்கி! எல்லாம் வல்ல வல்லிபுர மாயவன் துணையுடன்! அன்பர்களே! 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற முதுமொழிக்கு ஒப்பாக கடந்த நாற்பது ஆண்டுகளாக 1968 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மேமாதம் 26ம் திகதி வரை சுகாதாரத்திணைக்களத்திலும், யாழ். போதனா வைத்தியசாலையிலும், பரு. ஆதார வைத்தியசாலையிலும், முதலில் மலேரியா தடுப்புப் பிரிவிலும், பரிசாரகராகவும் பிற்பகுதியில் சிரேஷ்ட வைத்தியசாலை மேற்பார்வையாளராகவும் கடமையை கண்ணும் கருத்துமாக நோயாளருடன் கண்ணியமாகவும் கண்டிப்புடனும், வைத்தியர்களுடன் கீழ்படிவுடனும் துடிப்புடனும், செயற்றிறன் மிகுந்தவராக நடந்து வந்துள்ளார்.

கடமை முடிந்து இல்லம் சென்றாலும் குடும்பத்தின் குறை கேட்டறிந்து நிறைவு செய்து பாசமுடன் இருப்பார். அயலவர்களிடமும், நண்பர்களிடமும் அவர்களுக்கு உதவிகள் புரிந்து கொள்வார். சமயப் பணிகளிலும் அளப்பரிய ஈடுபாடுடையவர்.

என்னுடன் திருஇருதயக் கல்லூரியில் சக மாணவ நண்பனாக கல்வி பயின்ற காலப்பொழுதில் [1960] எனக்கு'உடுக்கை இழந்த வேளை இடுக்கண் களையும்' நண்பனாக இருந்தவர். கல்வியிலும் மிகுந்த ஆசான். சக மாணவ, மாணவிகளிடமும் பண்புடன் நடந்து கொண்டவர். ஆசிரியர்களிடமும் அடக்கமாகவும், பணிவாகவும் நடந்து மிக மிக நற்பெயர் பெற்ற மாணவன்.

தனது சேவையிலிருந்து ஓய்வு பெறும் இவரை ஸ்ரீ வல்லிபுர மாயவனின் நல்லருள் ஆசிகளையும், எனது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேன் மேலும் சமூக சமய சேவைகள் தொடரவும் எனது வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக.

**பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு (J.P)**
**பிரதமகுரு**
ஸ்ரீ வல்லிபுரக் கோயில்,
ஸ்ரீ ஆழ்வார்பீடம் புலோலி.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் செய்தி



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீண்டகாலம் சிற்றூழியர் மேற்பார்வையாளராக பணியாற்றிய இசக்கியல் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்வது சுகாதாரத் திணைக்களத்திற்கு ஓர் இழப்பாகும். சிற்றூழியர்களுக்கு மிக மோசமான பற்றாக்குறை நிலவிய காலங்களில் கைவசமிருந்த ஊழியர்களைக் கொண்டு சிறப்பான சேவையை வழங்க மிகவும் உறுதுணையாக இருந்தார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் இவர் தனது சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார். மிகவும் நெருக்கடியான காலங்களில் எல்லாம் மக்களுக்கு சீரான சேவைகள் கிடைப்பதற்கு அயராது உழைத்துள்ளார். இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் அவரது சேவைகள் சுகாதாரத் திணைக்களத்தால் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்படும். அவருக்கு நல்ல ஆரோக் கியமும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க எமது நல்லாசிகள்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

## வாழ்த்துரை



சுகாதார சேவைகள் திணைக்களத்தில் 40 ஆண்டுகள் பணியாற்றி இன்று 60 ஆவது அகவை காணும் ஓய்வு பெறும் முருகேசு எசேக்கியேசான் நீண்ட ஒப்படைப்புள்ள மருத்துவ சேவையை பாராட்டி வாழ்த்தி இறை ஆசி வேண்டுவதோடு, அவரை எமக்களித்த பெற்றோருக்கும் இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன்.

இவர் தனது ஆற்றலை மருத்துவ சேவையுடன் மட்டுப்படுத்தாது மெதடிஸ்த திருச்சபை திருப்பணிகளிலும் முன்னின்று உழைத்தவர்.

இவற்றுக்கு ஊடாக இவர் கிறிஸ்துவின் விழுமியங்களை வாழ்ந்து காட்டினார்.

இவரது திருப்பணிகள் இன்னும்பல ஆண்டுகள் தொடர இறை ஆசி வேண்டி நிற்கிறேன்.

**அருட்திரு.ரி.தேவநேசன்,**
பதிவாளர்,
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, சுன்னாகம்.



## முருகேசு எசேக்கியேல்

*MURUGESU. ESAKIEL.HO.15*

சிரேஷ்ட வைத்தியசாலை மேற்பார்வையாளர்
**(HEAD OVERSEER)**
*ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.*

1) பிறப்பு:- 26.05.1949 - துன்னாலை மேற்கு, கரவெட்டி
2) ஆரம்பக்கல்வி:-01.01.1955-அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி
3) உயர்கல்வி:- 01.01.1960 - வதிரி. திரு இருதயக்கல்லூரி
4) திருமணம்:- . 18.01.1972 - கட்டைவேலி மெதடிஸ்த ஆலயம்
5) தொழில் :- 16.09.1968 [மலேரியாத் தடைப் பகுதி A.M.C] சுகாதாரத் திணைக்களம், மா.வை.அதிகாரி, பருத்தித்துறை.
6) பதவி மாற்றம்:-10.11.1979 பரிசாரகர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.
7) பதவிஉயர்வு :- 03.01.1980 பரிசாரகர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை.
8) பதவி உயர்வு:- 01.01.2001 வைத்தியசாலை மேற்பார்வையாளர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை.
9) இளைப்பாறுதல்:- 26.05.2009
10) சேவைக்காலம்:- 40 வருடம்

### ஆன்மீகப் பணி (LOCAL PREACHER)

1) உள்ளூர் அருளுரையாளர் ,(01.01.1980-இன்றுவரை) மெதடிஸ்த திரு அவை பருத்தித்துறை/கட்டைவேலி சேகரம்
2) சேகர உக்கிராணக்காரர்- ஆதனம் - பருத்தித்துறை-கட்டைவேலி CIRCUIT STEWARD சேகரம்
3) நூல் நிலையப் பொறுப்பாளர் - கட்டைவேலி ஆலயம் (LIBRARYADVISER)
4) ஆலோசகர் (ADVISER) Y.M.C.A. இளைஞர் வாலிபர் கழகம். பருத்தித்துறை.
5) செயலாளர், பாதுகாவலர் சிற்றாலயம், பிரார்த்தனை மண்டபம்- மந்திகை (SECRETARY)

கட்டைவேலி, கோவில்பற்று, வடமராட்சி, கொற்ற உடையார் பகுதியில் துன்னாலை மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த முன்னாள் மருந்துக் கலவையாளர் யோன் சுந்தையா முருகேசு ஆசிரியர் றோஸ் செல்லமுத்து முருகேசுவின் மகனுமாவார்.

கல்வி: ஆரம்பக்கல்வியினை அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர் கல்வியை வதிரி திரு இருதயக் கல்லூரியிலும் கல்வி கற்று 16.09.1968ல் சுகாதாரத் திணைக்களம் மலேரியாத்தடைப் பகுதியில் ஆரம்பித்து மா.வை.அதிகாரி பணிமனையினராகி பின்னர் நாகர் கோவில், கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, துணுக்காய் பகுதியில் கடமை புரிந்து 11.11.1974 முதல் ஆண் பாரிசாரகராகப் பதவி வகித்து 03.01.1980 முதல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பதவியைத் தொடர்ந்து 01.01.2001 பதவியுயர்வு பெற்று வைத்தியசாலை மேற்பார்வையாளராகக் கடமை புரிந்து 26.05.2009 முதல் தனது சுகாதாரத் திணைக்கள சேவையை நிறைவு செய்து ,தொடர்ந்து மக்களுக்கு சமூக ,சமய ஆன்மீகப் பணியினை தொடர இறைவன் நம்மோடு துணை நின்று செயல்படுவார்.

**M.ESAKIEL மேற்பார்வையாளர்,**
**அரசினர் ஆதார வைத்தியசாலை,பருத்தித்துறை.**

**வாழ்த்துவோர்:-**
**மெதடிஸ்த திருச்சபை, பருத்தித்துறை-கட்டைவேலி சேகர மக்கள்.**

## ஆன்மீக வாழ்வில் முன்மாதிரியானவர்



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் M. எசேக்கியேல் அவர்கள் 40 வருட பணிக்காலத்தை நிறைவு செய்யும் இந்நாள்களில் அவரது வாழ்வு,பணியை நினைத்து வாழ்த்து வதில் மிக மகிழ் வடைகின்றேன். இவர் தனது கடமையில் உண்மையும், நேர்மையுமானவர் என்பதை அறிவேன்.

ஆன்மீக வாழ்வில் முன் மாதிரியான வாழ்வைக் கொண்ட அவரது வாழ்வு தனது கடமை புரியும் தளத்திலும் அர்ப்பணிப்போடு செயல்பட்டவர். வைத்தியசாலையில் முழுமையாய் எந்தளவிற்கு ஈடுபடுத்தி அர்ப்பணிப்போடு செயற்பட்டாரோ அந்தளவிற்கு திருச்சபை வாழ்வில் ஒரு முன் மாதிரி யான கிறிஸ்தவ வாழ்வை க்கொண்டிருப்பவர். சிறப்பாக வைத்திய சாலை வளாகத்தில் மெதடிஸ்த திருச் சபையின் சிற்றாலயம் உருவாகவும், அதற்கூடாக தேவையுடையோர் மத்தி யில் ஆன்மீகப் பணியை கொண்டு செல்லலவும் வெகுவாய் பாடுபட்டவர். தனது அரச பணியிலிருந்து இளைப்பாறும் அவரது வாழ்வு,பணி சமூகத்திலும், திருச்சபை வாழ்விலும் தொடரவேண்டி கடவுளிடம் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**இறைப்பணியில் அருட் திரு என். அருள்நாதன்.**
மெதடிஸ்த தேவாலயம் பருத்தித்துறை-கட்டைவேலி சேகரம்.

## நேர்மையான பணியாளன்



வைத்தியசாலை சேவையில் இருந்து இன்று இளைப்பாறிச் செல்லும் மணிவிழா நாயகன் திரு. முருகேசு சேக்கியேல் 40 ஆண்டுகளாக தனது பணிகளை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இறையாக்கத்துடன் செய்துள்ளார்.

இவரது நேர்மையான பணிகளை நேரில் கண்டறிந்து அவரை நினைத்துப் பார்த்துள்ளேன். இவர் ஆற்றிய சேவைமூலம் ஆத்ம திருப்தியும், இறையாசியும் என்றென்றும் இவருக்குண்டு. இவரது பணிகள் பாராட்டுக்குரியவை. இவரது நல்வாழ்வுக்கு இறைவன் என்றென்றும் துணை நிற்பார்.

**மு.சிந்தரலிங்கம்**
அபிவிருத்திச் சபை செயலாளர்,
அரசினர் சுகாதார வைத்தியசாலை பருத்தித்துறை.

## நோயாளர் நலனில் அக்கறை கொள்பவர்



40 வருட கால சேவை அனுபவத்தில் பதவியுயர்வுகள் பல பெற்று இறுதியில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி நோயாளர் நலனில் அக்கறை கொண்டு பணிசெய்ததால் நிர்வாக மட்டத்தின் நன்மதிப்பைப் பெற்றுவந்தார். ஊழியர் நலன்புரிச்சங்க நிர்வாக உறுப்பினராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டு கடமையாற்றிய இவர் நீடூழி வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறேன்.

**பொன். கஜேந்திரன்**
செயலாளர், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்திய சாலை,பருத்தித்துறை.

## கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்



எமது மந்திகை ஆதார வைத்தியசாலையில் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்கின் முருகேசு எசேக்கியல் அவர்களின் சேவை நயப்பினை விதந்துரைப் பதில்மட்டற்றமகிழ்ச்சியடைகிறேன்.

மக்களின் சேவை மகேசனுக்கு ஆற்றும் சேவை என்பார்கள். அதிலும் மருத்துவத்துறை சார்ந்தோர் செய்யும் சேவை மகோன்னத சேவையாகும். அந்த வகையில் எமது வைத்தியசாலையில் பரிசாரகராக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கடமையாற்றி இப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். போர்மேகம் எமது பிராந்தியத்தை ஆக்கிரமித்த காலப்பகுதியில் ஊழியர் பற்றாக்குறை நிலவிய அக்காலத்தில் நேரகாலம் பாராது அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். தன்னுடைய கடின உழைப்பினால் பதவியுயர்வுகளைப் பெற்று வைத்தியசாலை மேற்பார்வையாளராக தன்னை உயர்த்திக் கொண்டார். இளைப்பாறும் காலம்வரை அப்பதவியில் சிறப்புறத் திகழ்ந்தார். தான் சார்ந்த சமயத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர். கடவுள் நம்பிக்கை மிக்கவர். இவ்வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தின் வாராந்த வழிபாடுகளில் தவறாது கலந்து கொண்டு அவ்வாலயத்தின் வளர்ச்சியிலும் ஆன்மீகப் பணியிலும் தன்னை அர்ப்பணித்தார்.

அவர் ஓய்வுபெற்று வாழும் காலத்தில் தனது குடும்பத்துடன் சிறப்பாக நோய் நொடியின்றி வாழ்ந்து மேலும் பல சமூக சேவைகளை முன்னெடுக்க வேண்டும் என அவரை மனமார வாழ்த்துகிறேன்.

**Dr.வே.ஜெயராஜா,**
பதில்மாவட்ட வைத்திய அதிகாரி,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 * 06 * 1989



இறப்பு 26 * 05 * 2005

### செல்வி மேரி தியோஜினி சூசைதாஸ்

ஈரிரண்டு ஆண்டுகள் ஓடியே மறைந்திடினும்
ஓரிரண்டு நாழிகைதானும் நாம் உனை மறந்ததில்லை
பேரிரக்கச் செம்மல் அவன் பெருந்தயவால் ஓர் நாள்
பேரின்ப வீட்டின் பெருமகிழ்வில் ஒன்றிணைவோம் உறுதி.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (85449)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**


## 'மஞ்சள், குங்குமம்' மணமக்கள் அறிமுக சேவைகள்

நோக்கங்கள் 1 அனைத்து மணமக்கள் விவரங்களையும் உரியவர்கள் மூலம் ஒன்று சேர்த்தல். 2.உடனுக்குடன் தெரிவுகளை மேற்கொண்டும் பொருத்த மானவர்களை அடையாளம் கண்டும் உரியவர்களுக்கு உடனுக்கு டன் அறிவித்தல். 3.இரு பகுதியினரையும் அறிமுகப் படுத்தல். தகுதிகள் மிக்க ஏராளமான மணமக்கள் விவரங் களுடன் நன்கு பரிச்சயமான அமை விடத்தில் இப்போது சந்திக்கின் றோம். 'மஞ்சள், குங்குமம்' பரமேஸ்வராச்சந்தி, (Petrol shed முன்பாக) பலாலி வீதி, திருநெல்வேலி. (85569)


## தவறிவிட்டது

கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய திருமதி தனபாலசிங் கம் ரத்தினாதேவி என்பவரது தே.அ.அ (606393504V) விசேட அ.அ. அடங்கிய பேர்ஸ் 18.05.2009 அன்று K.K.S. வீதியில் மருதனார் மடத்திற்கும் இணுவில் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் தந்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.: 077 2208390, 077 9124960.


## டிஜிற்றல் பிறின்ட்

90 ரூபாயில் இருந்து



★ இல.212,கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
★ இல.40 [illegible]
T.P: 0718 [illegible] 2229607


## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 * 06 * 1934



மறைவு 26 * 05 * 1994

### திருமதி திருநாவுக்கரசு திரவியம்

அன்பதனைச் சொரிந்து அருகிருந்து
ஆதரித்த எங்கள் அன்புத் தெய்வமே
அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய
வெல்லில் முருகனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முருகமூர்த்தி வீதி,
சங்கானை. (85223)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுப்பொருள்களைக் கொண்டு கலைநயம் மிகுந்த சிற்பங்களை வடிக்கும் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்

கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வித்துறையின் விரிவுரையாளராகக் கடமையாற்றும் தம்பிராசா சிவகுமார் (32 வயது) கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட சிற்பங்களையும் அழகியல் அம்சங்கள் நிறைந்த கைவினைப் பொருள்களையும் சிறப்பாகப் படைப்பவராகவும் மிளிர்கின்றார். இவர் தனது அனுபவங்களை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றார்.



**கேள்வி:-** கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரான உங்களின் கல்விப் பின்புலம் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** என்னுடைய ஆரம்பக் கல்வியை ஊரெழு கணேசாவிலும், பின்னர் தரம் 6இலிருந்து வசாவிளான் மகாவித்தியாலயத்திலும் கற்றேன்.


1995 ஆம் ஆண்டு குடாநாட்டு மக்கள் எல்லோருடனும் இணைந்து நானும் தென்மராட்சிக்கு இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் என்னுடைய உயர்கல்வியை மட்டுவில் மகாவித்தியாலயத்தில் கற்றேன்.

அதன்பின்னர் மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக்கல்விக்கான முகிழ்நிலை ஆசிரியராகப் பயிற்சி பெற்றேன். அதிலும் குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வித்துறையில் என்னுடைய பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தேன்.

கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறியதும், நல்லூர் பெண்கள் இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றேன்.

அங்கு நான் ஆசிரியராகப் பணிபுரிகின்றபோது என்னுடைய திறமையைக் கண்டுகொண்ட கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் அப்போதைய பீடாதிபதியான கமலநாதனும், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்த ப.விக்னேஸ்வரனும் நான் கல்வியியற் கல்லூரியில் கடமையேற்க வழிவகை செய்தனர்.

**கேள்வி:-** ஓவியத்துறை மற்றும் சிற்பங்களை வடிவமைக்கும் கலை என்பவற்றில் உங்களுக்கு எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?



**பதில்:-** சித்திரம், மற்றும் அது தொடர்பான அழகியல் வேலைகள் என்பனவெல்லாம் என்னுடைய தனிப்பட்ட தேடலின் அடிப்படையிலேயே எனக்குள் வளர்க்கப்பட்டன. எவருமே எனக்கு வழிகாட்டிகளாக இருக்கவில்லை. கண் பார்த்ததைக் கை செய்யும் என் பதற்கிணங்க என் மனதைப் பாதிக்கும் காட்சிகளை சித்திரங்களாகவும், உருவங்களாகவும் என்னுடைய கற்பனை வளத்தையும், கைவண்ணத்தையும் கொண்டு உருவாக்கினேன்.

1989ஆம் ஆண்டு பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற ஓவியப் போட்டியில் முதல் தடவையாகக் கலந்துகொண்டேன். இதில் வறுமையைச் சித்திரிக்கும் ஓவியம் ஒன்றை வரைந்து அதனை இனிப்புகள் சுற்றி வரும் கழிவுத் தாளைப் பயன்படுத்தி அலங்கரித்தேன். அது பலரின் பாராட்டுக்களையும் பெற்றது.

இதைவிட மட்டுவில் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற கண்காட்சியில் மண், பனை ஓலைகள், தீக்குச்சிகள் என்பவற்றைக் கொண்டு செய்யப்பட்ட ஆக்கங்களைக் காட்சிப்படுத்தியபோது அவையும் வரவேற்பைப் பெற்றன.

**கேள்வி:** இத்தகைய ஓவியத் துறையிலும், வினோதமான வடிவங்களை அழகியலுடன் படைப்பதற்குத் தனிப்பட்ட தூண்டல் ஏதாவது உண்டா?

**பதில்:** மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரியராக நான் கொண்டிருந்த காலப்பகுதியில் தென்னிலங்கைக்கு ஒரு கல்விச் சுற்றுலா செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதன்போது மரவேர், மரக்கிளை மற்றும் இயற்கைப் பொருள்கள் என்பவற்றைக் கொண்டு விதவிதமான வடிவங்களையும் உருவங்களையும் செய்து வீதியோரமாக விற்பனைக்காக வைத்திருந்தார்கள். இத்தகைய உருவங்களை நாம் ஏன் செய்யக்கூடாது என்ற எண்ணம் எனக்குள் ஏற்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட தூண்டலே மரங்களின் வேர்கள், கிளைகள், கழிவுப்பொருள்கள் போன்ற பொருள்களில் நான் ஆக்கங்களைப் படைக்கக் காரணம் எனலாம்.

**கேள்வி:-** ஓர் ஆசிரியராக, விரிவுரையாளராக, அழகியல் தன்மை கொண்ட உருவங்களைப் படைப்பவராக பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்டுள்ளீர்கள். இது தவிர வேறு முயற்சிகளிலும் நீங்கள் ஈடுபடுவதுண்டா?



**பதில்:** நாம் அறிந்தவற்றைப் பிறருக்கும் தெரியப்படுத்தவேண்டும் என்ற கொள்கையுடையவன் நான். அவ்வகையில் என்னுடைய ஓய்வுநேரங்களில் பயனுள்ள நூல்களை எழுதி, அவற்றை வெளியிட்டுள்ளேன். அண்மையில் நான் எழுதி வெளியிட்ட தொடர்பாடல் தேர்ச்சிக்கான ஆக்கத்திறனும் கிரகித்தலும் என்ற நூல் ஆசிரியர்களிடையே பெரு வரவேற்புப் பெற்றுள்ளதை அறியக்கூடியதாகவுள்ளது.

**நேர்காணலும் படங்களும்: நேசன்**

இதேவேளை விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும் என்ற நூலுக்கு வடமாகாணக்கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் 2007ஆம் ஆண்டுக்கான இலக்கிய நூல் பிரிவில் உயர்விருதும் கிடைத்துள்ளது.

# ஆயிரத்து 50 மில்லியன் ரூபா செலவில் வடக்கு - கிழக்கில் பாடசாலை அபிவிருத்தி

கொழும்பு,மே26

வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கில் 30 பாடசாலைகள் ஆயிரத்து 50 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் முதல் கட்டமாக வடக்கிலும் கிழக்கிலும் 17 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில், வவுனியா தெற்கு சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம், ஓமந்தை மகாவித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதய வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம், தென்மராட்சி வரணி மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, மன்னார் புனித அன்னம்மாள் மத்திய மகா வித்தியாலயம், முருங்கன் மகாவித்தியாலயம் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் தெஹியத்த கண்டிய மெதகம மகாவித்தியாலயம், தம்பலுவில் மத்திய மகா வித்தியாலயம், தம்பலகாமம் சிராஜ் முஸ்லிம் மகாவித்தியாலயம், பதவியா ஸ்ரீபுர பலுகஹவங்குவ மகா வித்தியாலயம், கந்தளாய் அக்போபுர மகா வித்தியாலயம், கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம், முதலைக்குடா மகா வித்தியாலயம், பேத்தாளை விபுலானந்தா வித்தியாலயம் ஆகியன முதற்கட்ட அபிவிருத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகளாகும். (50)

# வீடு கையளிப்பு

வண்ணை,மே26

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/113 கிராமசேவையாளர் பிரிவில் கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு வீடமைப்பு அதிகார சபை அனுசரணையுடன் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் நிரந்த வீடொன்றை அமைத்து வழங்கியுள்ளது.

3 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மேற்படி வீட்டைப் பயனாளியான அலோசியஸ் மேரி வின்சலா என்பவரிடம் நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் மற்றும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் வண.கி.யோ.ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் இணைந்து கையளித்தனர். (50-160)

# கல்வியியற் கல்லூரி புதிய மாணவர் பதிவு நாளை ஆரம்பம்

அச்சுவேலி,மே26

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்த வருடத்துக்கான புதிய மாணவர் அனுமதி தொடர்பான பதிவுகள் நாளை புதன்கிழமை நடைபெறும் எனவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் எனவும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரி மாணவர் அனுமதி மற்றும் கற்றல் செயற்பாடுகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்படும். எனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விடுதியில் தங்குவதற்கான ஏற்பாடுகளுடன் சமூகம் தரவேண்டும் எனவும் உரிய காலப்பகுதியில் பதிவுகளை மேற்கொள்ள தவறுவோரின் இடத்துக்கு பட்டியலில் அடுத்த நிலையில் உள்ளவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (50-11)

# விமானசேவைகள் நாளை வரை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே26

குடாநாட்டில் இருந்து கொழும்புக்கான விமான சேவை நேற்று முதல் மூன்று தினங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

திருத்தவேலைகள் காரணமாக இந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் வியாழக்கிழமை முதல் சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்றும் விமானசேவை வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டது. (1)

# உலகிலேயே மிகப்பெரிய தடுப்பு முகாம்களில் வவுனியா மனிக் பார்ம் நலன்புரி நிலையமும் ஒன்று

## 'த ரைம்ஸ்' செய்தியாளர்கள் விவரிப்பு

லண்டன்,மே26

உலகிலேயே மிகப்பெரிய தடுப்பு முகாம்களில் ஒன்றான வவுனியா மனிக் பார்ம் முகாமில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது எதிர்பார்ப்புகள் தகர்க்கப்பட்டு முட்கம்பிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக 'த ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

தாங்கள் திறந்த சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரமாகவே வாழ விரும்புவதாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் தெரிவித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் வவுனியா தடுப்பு முகாமிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில் அவருடன் சென்றிருந்த 'த ரைம்ஸ்' செய்தியாளர்களே இதனைத் தெரிவித்துள்ளனர்.

மனிக் பார்ம் முகாமை முகாம் என்பதைவிட சிறை என்றும் காட்சிக் கூடம் என்றுமே அழைக்கவேண்டும் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் இராணுவத்தினர் மத்தியிலும் கூடாரங்களாக அமைக்கப்பட்டுள்ள பதுங்கு குழிகளுக்கு மத்தியிலும் மக்கள் பரிதவிக்கின்றனர்.

இதற்கிடையில் அந்தப் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற அனுமதி மறுக்கப்படுவதாகவும் முட்கம்பிகளுக்கு இடையில் மக்கள் வாழ்வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் இணைப்பாளர் ஜெர்சன் பிரான்டோ தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் அமைக்கப்பட்ட முகாம்கள் பற்றி புத்தகங்களில் தாம் படித்துள்ளதாகவும் மனிக் பார்ம் முகாம்களை பார்க்கும்போது அவற்றை மீண்டும் நேரடியாக உணர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அங்குள்ள இளைஞர்கள் முன்வந்து உண்மையைச் சொல்ல முற்பட்டால் அவர்கள் பாதுகாப்பாக இருக்க முடியாது என முகாமில் உள்ளவர்கள் தெரிவித்தாக 'த ரைம்ஸ்' தமது செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முகாம்களிலுள்ள மக்கள் உணவோ சுத்தமான நீரோ இன்றி மிகவும் அவதிப்பட்டு வருவதாகவும் 'த ரைம்ஸ்' தெரிவித்துள்ளது. (50)

# ஈழத் தமிழரின் வாழ்வு மலர உறுதுணையாக இருப்போம்

## நடிகர் சங்க பொதுக்குழு தீர்மானம்

சென்னை,மே26

பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் தமிழ் மக்கள் வாழ்வு மலர தென்னிந்திய நடிகர் சங்கம் என்றும் உறுதுணையாக நிற்கும் - என்று அந்தச் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடிகர் சங்கப் பொதுக்குழு கூட்டம் தியாகராய நகரில் உள்ள சங்க அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடந்தது. சங்கத் தலைவர் சரத்குமார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

கூட்டத்துக்கு முன்னணி நடிகர் நடிகைகள் பலர் வரவில்லை. இதை ராதாரவி கண்டித்தார்.

தொடர்ந்து நடிகர் சங்க அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

நடிகர் சங்கத்தில் உறுப்பினர் ஆகாமல், தமிழ் திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் நடிகர் நடிகைகள் அனைவரும் உடனடியாக நடிகர் சங்கத்தில் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அனைத்து நடிகர் நடிகைகளும் தாம் நடிக்கும் படத்தின் தயாரிப்பாளருடன் கண்டிப்பாக எழுத்து மூலம் ஒப்பந்தம் போட வேண்டும். ஒப்பந்தம் போடாத உறுப்பினர்களுக்கு ஏற்படும் பிரச்சினையில் சங்கம் தலையிடாது.

பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் தமிழ் மக்கள் வாழ்வு மலர தென்னிந்திய நடிகர் சங்கம் என்றும் உறுதுணையாக நிற்கும்.

இலங்கைத் தமிழர்கள் நிதிக்கு 62 லட்சத்து 69 ஆயிரத்து 8 ரூபாவை நிதியாக அளித்த உறுப்பினர்களுக்கு நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாவடி, கொக்குவிலில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதிக்கு வருகை தந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் இலங்கைக் கிளையின் உபதலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வ ரூபானந்தஜி மகராஜ் சமிதியினால் நடத்தப்பட்ட யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கும், சமிதியைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்த மாணவிக்கும் சான்றிதழ்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே26

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (201-224)

* * *

யாழ்ப்பாணம்,மே26

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறும். (201-207)

* * *

யாழ்ப்பாணம்,மே26

சுன்னாகம் மயிலணி - திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ வில்வநாதசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201)

* * *

சுழிபுரம்,மே26

சித்தன்கேணி - பெரியவளவு மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201-28)

* * *

வடமராட்சி,மே26

தென்புலோலி காந்தியூர் கோட்டத்துறை பத்திரகாளி சமேத வேம்படி வீரபத்திரர் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை 1008 சங்காபிஷேகமும் திருக்கல்யாண திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இந்தச் சங்காபிஷேகமும் திருக்கல்யாண திருவிழாவும் அல்வாய் கிழக்கு மாலிசந்திப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சபா.தேவராஜக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (201-236)

* * *

சுழிபுரம்,மே26

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கந்தரநுபூதி பாடல்களை மனனம் செய்து ஒப்புவிப்பவர் திருவிழா நடைபெறும் தினங்களில் ஆலயத் தெற்கு வாசல் வெளிமண்டபத்தில் வைத்துக் கேட்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சங்காபிஷேகத் தினத்தன்று கந்தரநுபூதிப் பாடல்களை மனனம் செய்து ஒப்புவித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (201-28)

* * *

யாழ்ப்பாணம்,மே26

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவ காமி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும 6ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * *

அச்சுவேலி,மே26

அச்சுவேலி, நாவலம்பதி காட்டுமலை கந்தசாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி உருத்திரநாயகி திருவிழாவும், 7ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 16ஆம் திகதி தண்டாயுதபாணி திருவிழாவும், 20ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 22ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 23ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201-11)

* * *

யாழ்ப்பாணம்,மே26

வேலணை மேற்கு, பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குச் சப்பரத் திருவிழாவும் மறுநாள் 6ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (50-236)

## கமலாசனி வித்தியாலய பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம்,மே26

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழாவும், கலை விழாவும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்துகொள்வார்கள். (50-86)

## ஆலய மின்னிணைப்புக்கு 2லட்சம் ரூபா அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே 26

நவாலி தெற்கு - தம்பனை மாரியம்மன் ஆலய மின்சார இணைப்புப் பெற புலவர் வீதி, நவாலி வடக்கைச் சேர்ந்த தியாகராஜா ராஜ்குமார் 2 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என நவாலி தம்பனை - தில்லைக்காளி அம்மன் ஆலய பிரதம குரு சின்னத்துரை சிறிதரன் தெரிவித்தார்.

கடந்த 8 வருடங்களாக தம்பனை தில்லைக்காளி அம்மன் ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஹொலண்ட் நாட்டில் வசிக்கும் நவாலி வடக்கைச் சேர்ந்த தியாகராஜா ராஜ்குமார் வழங்கிய நிதி அன்பளிப்பினை தொடர்ந்து தற்போது கடந்த 23ஆம் திகதி முதல் ஆலயம் ஒளியுடன் பிரகாசிப்பதாக ஆலய பிரதமகுரு சி.சிறிதரன் தெரிவித்தார்.

இதேவேளை-

நவாலி வடக்கு -பெத்தனாச்சி ஆலயத்திற்கு மின்சாரம் இணைப்பு வழங்குவதற்கென 21 கம்பங்கள் நாஷ்டப்பட்டுள்ளன.

விரைவில் கொக்குவில் உப-அலுவலக மின் அத்தியட்சகர் தலைமையில் மின்சார வயர் இணைப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையினை நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் மேற்கொண்டுள்ளார். (50-95)

## அல்லையம்பதி முருகன் ஆலயத்திற்கு இணையத்தளம்

வடமராட்சி,மே26

துன்னாலை அல்லையம்பதி முருகன் கோயிலில் நிகழ்வுகளை கண்டுகளிப்பதற்கு வசதியாக இணையத்தளம் ஒன்று நாளை புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

www.allaikanthan.com என்ற முகவரியில் இக்கோயிலின் நிகழ்வுகளை நாளை முதல் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஜெயபாலன் என்பவரின் அனுசரணையுடன் இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்படுகிறது. (50-236)




உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மையாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தைப் பெற்றுத்தரும்.
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream
100% herbal
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## மரண அறிவித்தல்



### செல்லையா நடராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவிலுள்ள திருச்சியினை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா 24.05.2009 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பிள்ளையம்மாவின் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு (காரைநகர்) அவர்களின் அன்புச் சகோதரனும் சுந்தரலிங்கம், யோகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் தந்தையும் பாக்கியலட்சுமி, வன்னியசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் வனிதன் (லண்டன்), விஜயசிறி (இந்தியா), சுரேஸ் (இந்தியா), சுரேகா, லாவண்யா, செந்தூரன், அனுசியா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் பொன்மலர், சிவகுமாரன், சிவபாலன், சிவானந்தி ஆகியோரின் பெரிய தந்தையும் பெ.சண்முகராசா, விக்கினேஸ்வரி, புஸ்பமலர், சிவசோதி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.05.2009) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
மகன் - சுந்தரலிங்கம்.

## தவறிவிட்டது

பாலஸ்கந்தவேல் சரவணபவன், சாவற்காடு, மன்னார் என்னும் பெயரும் முகவரியுடைய சாரதி அனுமதிப்பத்திரம் (A 007 000733) யாழ்.நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிலம்புப் புளியடி, சங்கானை என்னும் முகவரியுடன் அல்லது 060 221 8981 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (85572)

## தவறிவிட்டது

தங்கச் சங்கிலியும் சாருஜன் எனப் பெயர் பொறிக்கப்பட்ட பென்ரனும் K.K.S. வீதியில் இருந்து யா/போதனா வைத்தியசாலை செல்லும் வழியில் நேற்று (25.05.2009) திங்கட்கிழமை தவறிவிட்டன. இதை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
சண்முகா பார்மசி
K.K.S. வீதி, சுன்னாகம். (85570)

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 * 02 * 1925



உதிர்வு 10 * 06 * 1986

### அமரர் தம்பு கதிரவேலு

(இளைப்பாறிய அதிபர், யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)

திதி: 26.05.2009

காலத்தின் நியதி மாறாது எமக்கு மட்டும்
கனத்த உள்ளத்தின் நினைவுகள் ...!
ஆண்டுகள் பல கடந்தும்
ஆற்றாமையால் வருந்துகின்றோம் ஐயா!
நீ வாழ்ந்த பூமி நிழலாகும் நின்முகம்
நிஜமாக எம்முடன் இருக்க
போனதென்ன நீண்ட பயணம்
புகுந்து விட்டீர் இறையுலகு... !

நிருவத்தம்பை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(85540)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறைக் கோட்ட தமிழ்த் தினப் போட்டி

வடமராட்சி, மே 26

பருத்தித்துறை கோட்டத் தமிழ்த் தினப்போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுதா மகிந்தபாலன் கலந்துகொள்வார்.

(50-236)

## வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டி

வடமராட்சி, மே.20

வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(50-236)

## விளையாட்டு விழா

நாவற்குழி,மே.26

கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வே.செல்வராசா தலைமையில் கல்விப் பூங்கா மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கைதடி கலைவாணி வித்தியாலய அதிபரும் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத் தலைவருமான ப.செல்லத்துரை கலந்துகொள்வார்.

(1-288)

# தீயில் கருகிய மோதல் தவிர்ப்பு வலயம்

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடந்த பாதுகாப்பு வலயப் பகுதி தீயில் எரிந்து கருகிய நிலையில் காணப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார், அப்பகுதியை ஐ.நா.செயலருடன் ஹெலியில் இருந்தவாறு பார்வையிட்ட 'அஸோசியேட்டட் பிரஸ்' (ஏ.பி) செய்தியாளரான ஜோன் ஹெய்ஸ்.

அப்பகுதியை பாழடிக்கப்பட்ட பகுதி என வர்ணித்துள்ள அச் செய்தியாளர், இறுதிப் போரில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லையென அரசு தெரிவிக்கின்றபோதிலும், அங்கு பாரிய பேரழிவு ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பகுதியை ஹெலி மூலம் பார்த்த பின்னர், பொதுமக்கள் அங்கு மிகவும் மனிதாபிமானமற்ற துயரங்களை அனுபவித்திருக்கிறார்கள் என ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்தார் என அச் செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற பகுதி பாழ்படுத்தப்பட்ட நிலமாகக் காட்சியளிக்கிறது. அது தீயினால் பொசுக்கப்பட்டுள்ளது. குழிகளால் நிரம்பியுள்ளது.

பதுங்குகுழிகளுக்கு அருகில் கார்களும் ஏனைய வாகனங்களும் தீப்பிடித்து எரிந்த நிலையில் குப்புறக் கவிழ்ந்து கிடக்கின்றன.

பெருமளவு பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகளை நோக்கி கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுவதை அரசு மறுக்கின்றது.

எனினும், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தையும் பத்திரிகையாளர் குழுவையும் இராணுவம் இப்பகுதிக்கு மேலாக ஹெலிக்கொப்டரில் அழைத்துச் சென்றவேளை நாம் பார்த்த காட்சிகள் அங்கு பேரழிவு ஏற்பட்டுள்ளதைப் புலப்படுத்துகின்றன. 25 வருட கால யுத்தத்தில் இறுதி மோதல்கள் இடம்பெற்ற கரையோர மணல் பகுதி முழுவதும் தீப்பிடித்து எரிந்து காணப்படுகின்றது. பாரிய குழிகளையும்



அங்கு காண முடிகின்றது.

ஒரு பகுதி கூடாரங்களால் நிரம்பிக் காணப்படுகின்றது. இவற்றில் அநேகமானவை சின்னாபின்னமாகியுள்ளன. கைவிடப்பட்ட வாகனங்கள் குப்புறக் கவிழ்ந்து கிடக்கின்றன. சில வாகனங்கள் முழுமையாக எரிந்து காணப்படுகின்றன. ஓலையால் வேயப்பட்ட குடிசைகள் அழிக்கப்பட்டுள்ளன. பெருமளவானவற்றின் கூரைகளைக் காணவில்லை.

ஒரு பகுதியில் கூடாரங்களுக்கு அருகில் மண்மூடைகள் மற்றும் பரல்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பதுங்குகுழிகள் காணப்படுகின்றன. அருகில் விடுதலைப் புலிகளின் சின்னத்துடன் பாரிய படகொன்று காணப்பட்டது.

எனினும், இராணுவம் தான் அப்பகுதி மீது ஷெல் தாக்குதலை மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்ததுடன் அங்கு காணப்படும் குழிகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும் தெரிவித்தது.

''இறுதி நாள்களில் புலிகள் இருந்த பகுதிக்குள் நாங்கள் பல வெடிகுண்டுச் சத்தங்களைக்கேட்டோம். அவர்கள் தமது வெடிமருந்துகளை அழித்திருக்கலாம்'' என இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

எனினும், முகாம்களில் தடுப்புக் கம்பிகளுக்குப் பின்னால் வாழும் பல பொதுமக்கள் தொடர்ச்சியான ஷெல் வீச்சுக் குறித்து தகவல்களைத் தெரிவித்தனர்.

மனிக் பாம் முகாமிலுள்ள பல பொதுமக்கள் சிறிதளவு உணவோ குடிதண்ணீரோ தமக்குக் கிடைக்கவில்லையெனத் தெரிவித்தனர். தங்களை வெளியே செல்வதற்கும் அனுமதிக்கவில்லை என்றும் ஆண்கள் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டனர்.

# புலிகளின் தலைவர்கள் பாதுகாப்பாக சரணடைவதற்கு உத்தரவாதம் வழங்க இலங்கை அரசு மறுத்துவிட்டது

## ஐ.நா.அதிகாரி விஜய் நம்பியார் சொல்கிறார்



சிட்னி, மே 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவரான பா. நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பாதுகாப்பாக சரணடைவது குறித்து உத்தரவாதம் வழங்க முடியாது என இலங்கை அரசாங்கம் கூறியதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக 'தி அவுஸ்திரேலியன்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் சரணடைய விரும்பும் தகவலை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூனிடம் தெரிவிக்குமாறு பிரித்தானிய ஊடகவியலாளர் ஒருவர் மூலமும் பிரிட்டிஷ் இராஜதந்திரியொருவர் மூலமும் தாம் கோரப்பட்டதாக விஜய் நம்பியார் 'தி வீக்கெண்ட் அவுஸ்திரேலியன்' பத்திரிகைக்கு தெரிவித்தார். இந்தத் தகவலை இலங்கை அரசாங்கத்திடம் தெரிவிக்குமாறு ஏனைய இராஜதந்திரிகள் ஆலோசனை கூறியதாகவும் அதன்படி இலங்கை அரசாங்க அதிகாரிகளிடம் இதைத் தெரிவித்ததாகவும். அதற்கு 'காலம் கடந்திருக்கலாம். நாங்கள் அதுபற்றிப் பார்ப்போம்' என பதில் கிடைத்தது என அவர் கூறினார்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாலசிங்கம் நடேசனும் சமாதான செயலகத்தின் தலைவரான சீவரட்ணம் புலித்தேவனும் யுத்தத்தின் கடைசித் தினங்களில், தாமும் தமது குடும்பத்தினரும் சரணடைவது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் உட்பட உதவி நிறுவனங்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கு பல தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை அவர்கள் சரணடைய விரும்புவதாக ஐரோப்பாவைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனமொன்றின் மூலம் தனக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹொகன உறுதிப்படுத்தினார். ஆனால் இது தொடர்பாக நம்பியாருடனோ வேறு இராஜதந்திரிகளுடனோ தாம் கலந்துரையாடல் எதையும் நடத்தவில்லை என வீக்கெண்ட் அவுஸ்திரேலியனிடம் அவர் கூறினார். குறித்த அரச சார்பற்ற நிறுவனத்திடமிருந்து கிடைத்த தகவலுக்கு வழக்கமான சரணடைதல் நடைமுறைகளை பின்பற்றுமாறு அவர்களிடம் கூறுமாறு பதிலளித்ததாகவும் அவர் கூறினார்.

இந்தத் தகவலை வேறு எவருக்கும் தான் பரிமாறவில்லை எனவும் அந்த நேரத்தில் சரணடைவது குறித்து தன்னுடன் தொடர்பு கொள்வது பிரயோசனமான வழியாக இருக்காது எனக் கருதுவதாகவும் குறித்த நபர்கள் இருவரும் படையினரால் சுடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் ஆனால் அவர்கள் தமது சகாக்களினாலேயே சுடப்பட்டிருக்கலாம் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த இவரும் தாம் சரணடைய விரும்பும் தகவலை இலங்கை இராணுவத்துக்கு தெரிவிக்கும்படி தம்மை கோரியதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. அவ்விருவரும் இறுதியாக ஞாயிறன்று இரவுதொடர்பு கொண்டதாக இராஜதந்திரிகளும் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் திங்கட்கிழமை காலை இந்த சரணடைதல் தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்தனர். அவர்கள் சுடப்பட்டதாக அன்றைய தினம் அரசாங்கம் அறிவித்தது.

புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன் நிராயுதபாணியாக வெள்ளைக்கொடியேந்தி வந்த தமது உறுப்பினர்களை இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுப் படுகொலை செய்ததாக குற்றம் சுமத்தினார்.

மேற்படி இருவரின் உடல்களும் தகனம் செய்யப்பட்டதாக பாலித ஹொகன தெரிவித்தார். பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட்டதா என்பது குறித்து அவரால் கூற முடியவில்லை. பிரபாகரனின் உடலும் தகனம் செய்யப்பட்டதாக இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த தகனங்கள் சாட்சியங்களை அழிக்கும் என்பதால் இது குறித்த செய்தி மிகுந்த கவலையளிப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பேச்சாளர் அன்னா நீஸ்டன் தெரிவித்துள்ளார். ஆனால் புலிகளின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படுவோர் துணை இராணுவக் குழுக்களினால் பாதிப்புக்குட்படும் சாத்தியமே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதான கவலைக்குரிய விடயம் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை மேற்படி சரணடைதல் விவகாரத்தில் பிரிட்டன் மறைமுகமான விதத்திலேயே தொடர்புபட்டதாக பிரிட்டிஷ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என பிரிட்டனின் கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் சார்பில் நாம் பிரத்தியேகமாக இதில் பங்குபற்றவில்லை. பொதுமக்களின் உயிர்களை பாதுகாப்பது உட்பட இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதில் ஐ.நா. செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்கவேண்டும் என நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம் என மேற்படி அதிகாரி தெரிவித்துள்ளார் .

# ஐ.நாவில் இலங்கையின் யோசனைக்கு மலேஷிய அரசு ஆதரவு வழங்கக்கூடாது

## டத்தோ சாமிவேலு வலியுறுத்தல்

கொழும்பு, மே, 26

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் எதுவும் தலையிடக்கூடாது என ஐ.நாவைக் கோருவதற்காக கொழும்பு தயாரித்துள்ள நகல் யோசனைக்கு மலேஷிய அரசு ஆதரவளிக்கக்கூடாது என அந்த நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவரான டத்தோ சிறி எஸ்.சாமிவேலு வலியுறுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக மலேஷியப் பிரதமர் நஜீப் ராசாவுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள அவசர வேண்டுகோள் ஒன்றிலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

மலேஷியாவில் 18 லட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர். இதில் 14 லட்சம் பேர் தமிழர்கள் எனவும் சுட்டிக்காட்டியிருக்கும் சாமிவேலு, இந்த நிலையில் அவர்களின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போரில் தமிழ்ச்சமூகத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தவர்கள் விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டும் எனவும் டத்தோ சாமிவேலு வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கை அரச படையினர் இனப்படுகொலை ஒன்றைச் செய்துள்ளனர் எனவும் குற்றம் சாட்டிய சாமிவேலு, அதற்குரிய தண்டனை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

வன்னியில் இடம்பெற்ற போரின் போது இலங்கை அரச படையினர் மேற்கொண்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாக ஜெனீவாவில் இன்று செவ்வாய்க்கிழமை தொடங்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் ஆராயப்படவிருக்கும் பின்னணியில் இதற்கு எதிரான காய்நகர்த்தல் ஒன்றை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது.

இதன்படி ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிட முடியாது என்பதை வலியுறுத்தும் யோசனை ஒன்றை இந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கு மலேஷியா உட்பட 12 நாடுகள் ஆதரவைத் தெரிவித்திருக்கின்றன எனவும் கூறப்படுகின்றது. இந்தப் பின்னணியிலேயே இதற்கு மலேஷியா ஆதரவளிக் கக்கூடாது என அந்நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவரான டத்தோ சாமிவேலு தெரிவித்திருக்கின்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அலுவலகப் பணியாளர்
தரம் 1 இல் கடமையாற்றும் திரு செ.கெங்காவரதன்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் செல்லத்துரை நாகம்மா**

அவர்கள் 22.05.2009 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்,
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வலி.வடக்கு, தெல்லிப்பழை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் குணலோகநாயகி இராஜரட்ணம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

மண்ணுலகில் 21.11.1947 | திதி: 26.05.2009 | விண்ணுலகில் 25.04.2009

பெண்ணிற்கு பெருந்தக்க யாவுளதென்பதற் கேற்ப
எண்ணத்தால் செயலால் நல்விடையாய் - வாழ்ந்திட்டு
பண்போடு குணலோக நாயகி பரம்பொருளை அடைந்த திதி
நண்ணுமுயர் விரோதி சித்திரை வளர்பிறை பிரதமை என்றறி
எம்மை எல்லாம் நல்வழிப்படுத்தி
எமக்கென வாழ்ந்த எம் இதயத் தெய்வம்
எம்மை விட்டு பிரிந்தாலும் - நீர்
எமக்கு விட்டுச்சென்ற பாதைகளில் என்றும்
உம் நினைவுகளுடன் பயணிக்கின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

16/1, நெல்சன் பிளேஸ், கொழும்பு-06 — குடும்பத்தினர்.
82/1, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 0777751207

# இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க வேண்டும்

## கனேடிய அரசு கோரிக்கை

ஒட்டாவா, மே 26

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தடையின்றிக் கிடைப்பதையும், தொண்டு நிறுவனப் பணியாளர்களின் பாதுகாப்பையும் இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என்று கனடா குரல் கொடுத்துள்ளது.

கனேடிய வெளியுறவு அமைச்சரும் சர்வதேச அபவிருத்தி அமைச்சரும் இது தொடர்பாக வெளியிட்டுள்ள ஒரு கூட்டறிக்கையில், சர்வதேச மனிதாபிமான விழுமியங்களுக்கு ஏற்ப இலங்கை அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு நடமாட்ட சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும், சுயவிருப்பத்தோடு தமது சொந்த இடங்களுக்கு திரும்பச் செல்ல விரும்பும் மக்கள் கூடிய விரைவில் திரும்ப இலங்கை அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் கனேடிய அமைச்சர்கள் கோரியுள்ளனர்.

இலங்கையின் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய அரசியல் நல்லிணக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற ஜனாதிபதியின் வாக்குறுதிகளுக்கு உடனடியாக செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கனேடிய அமைச்சர்கள் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வடமராட்சி,மே.26

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (50-236)


## விற்பனைக்கு

Haiar Brand Deep freezer (குளிர்சாதனப்) பெட்டி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0602217172


## தவறிவிட்டது

கும்பிளாவளை மேற்கு, அளவெட்டி என்னும் முகவரியுடைய ஆறுமுகம் சிறீதரன் என்பவரது தே.அ.அட்டைக்கு (800151718 V) விண்ணப்பித்த பதிவுத் துண்டு. (PB 670642) (கிராம சேவகர் பிரிவு J/216 அளவெட்டி, மத்தி) அளவெட்டியிலிருந்து யாழ்.நகர் வரும் வழியில் கடந்த 18.05.09 அன்று தவறிவிட்டது. மேலுள்ள முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும் தொடர்பு : 0776374251

## நித்திய இளைப்பாற்றுத் திருப்பலி

### அருட்தந்தை ததேயூஸ் சறத்ஜீவன்



அமரர் அருட்தந்தை ததேயூஸ் சறத்ஜீவன் அடிகளாருக்கு நித்திய இளைப்பாற்று வேண்டி ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் எம்மோடு இணைந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நாள்: இன்று (26.05.2009) செவ்வாய்க்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம்: புனித மரியாள் பேராலயம், யாழ்ப்பாணம்.

05, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(85577)
தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி


எமது சங்கத்தின் செயலாளராகிய
திரு.நா.குகதாசன் அவர்களின் புதல்வன்

**சசிதரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன் னாரது ஆத்மா சாந்திய டைய பிரார்த்திக் கின்றோம்.

மாவட்ட செயலக சாரதிகள் சங்கம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
(85578)

# 3 ஆம் ஆண்டு நினைவினிலே....



தாயின் மடியில் 22.03.1971 | இறைவன் அடியில் 26.05.2006

அன்பும் பாசமும் நிறைந்த எம் தெய்வமே
பாரினில் பரிதவிக்கவிட்டு பாதியிலே சென்றீரே...!
பார்போற்ற வாழ்ந்த உத்தமரே-நீங்கள்
மறைந்து மூன்றாண்டு சென்றதுவோ
நீர் நடந்த பாதையில் எங்கள்
பயணங்கள் உங்கள் நினைவுகளுடன்
என்றென்றும் நிலைத்து நிற்குமையா

அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
**சின்னத்துரை புவிராசா (புவி)**
(உரிமையாளர் சியான் ரேடர்ஸ் அச்சுவேலி,
கராத்தே ஆசிரியர் 3rd Dan)

குடும்பத்தினர்.
பிரதான வீதி, அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு சார்பான பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்கக் கூடாது

## கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

புதுடில்லி, மே 26

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் இன்று இலங்கை குறித்து ஆராயப்படும் போது இலங்கைக்குச் சார்பாக முன்வைக்கப்படும் எந்தப் பிரேரணைக்கும் ஆதரவளிக்க கூடாதென இந்திய அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கை நிலைவரம் குறித்து கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையொன்றை மேற்குலக நாடுகள் சமர்ப்பிக்கவுள்ள அதேவேளை இதனை முறியடிப்பதற்காக இலங்கையும் எதிர் பிரேரணையொன்றை முன்வைக்க வுள்ளது.

ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் உறுப்பினர்கள் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில்,தலையிடக் கூடாதெனக் கோரும் பிரேரணையை இலங்கை முன்வைக்கின்றது. இந்தப் பிரேரணைக்கு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆதரவளிக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையிலேயே இந்தியா இதற்கு ஆதரவளிக்கக் கூடாதென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

இலங்கையின் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால்; அது இலங்கை அரசு இதுவரை செய்தவற்றை ஆதரிப்பதாக அமையும் என்றும் அக் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா, பாகிஸ்தான், மலேஷியா போன்ற நாடுகள் இந்த விடயத்தில் இலங்கையை ஆதரிக்கவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்வதற்கு விசேட அமர்வு கூட்டப்பட்டதை இவை எதிர்க்கின்றன.

மனித உரிமை கவுன்ஸிலின் வழமையான கூட்டத் தொடரில் இதனை ஆராய்ந்திருக்கலாம் என இவை கருதுகின்றன.

மேலும் விடுதலைப் புலிகள் போன்ற- அரசு சாராத - செயற்பாட்டாளர்கள் குறித்து மனித உரிமை கவுன்ஸில் போதிய கவனம் செலுத்தவில்லையென்றும் இந்த நாடுகள் கருதுகின்றன.

## கல்விமாணி கற்கை நெறிக்கு மாணவ... தெரிவு செய்யும் பரீட்சை சனியன்று

யாழ்ப்பாணம், மே 26

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்விமாணிப் பட்டநெறிக்குப் புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப்பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு வெளிமாவட்டங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றவர்களும் யாழ்.மத்திய கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் லியானி அமரசிங்க அனுமதியளித்துள்ளதாக அதன் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (1-6)

# அகதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை தடையின்றி வழங்க கனடா வலியுறுத்து

கொழும்பு, மே 26

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தடையின்றிக் கிடைப்பதையும், தொண்டு நிறுவனப் பணியாளர்களின் பாதுகாப்பையும் இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும் என்று கனேடிய அமைச்சர்கள் இருவர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கனேடிய வெளியுறவு அமைச்சரும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இது தொடர்பாக வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், சர்வதேச மனிதாபிமான விழுமியங்களுக்கு ஏற்ப இலங்கை அரசு செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு நடமாட்ட சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும் கனேடிய அமைச்சர்கள் கோரியுள்ளனர்.

இலங்கையின் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய அரசியல் நல்லிணக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற ஜனாதிபதியின் வாக்குறுதிகளுக்கு உடனடியாக செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கனேடிய அமைச்சர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# கொழும்பு வர்த்தகர்களின் உயர்மட்டக்குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது

குடாநாட்டில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கும் வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பு வர்த்தக சம்மேளனத்தின் உயர்மட்டக்குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

இந்தக் குழுவில் பிரபல வர்த்தகப் பிரமுகர்களான ஹரின் மல்வத்த, சுலந்த ஜெயசூரிய, திஸ்ஸ ருபேரு, அஜித் வந்துஹேவ, திஸ்ஸ ஜெயவீர, ஏ.எச்.ஜி வி[illegible]னானந்தன ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வணிகர்கழகப் பிரதிநிதிகளையும் பிற்பகல் 4.30 மணிக்கு சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுப் பிரதிநிதிகளையும் மாலை 6 மணிக்கு கைத்தொழில் வணிகர் சம்மேளனப் பிரதிநிதிகளையும் குழுவினர் சந்தித்து கலந்துரையாடுவர்.

குடாநாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு தெற்கில் சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் - புதிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பது தொடர்பாகவும்-

தெற்கில் இருந்து குடாநாட்டிற்கு பொருள்களை அனுப்புவது தொடர்பாகவும் வர்த்தகப் பிரமுகர் குழு இங்கு ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள மாணவரின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை

யாழ் பல்கலைக்கழகத்திற்கு இந்த ஆண்டு அனுமதி பெற்றிருக்கும் மாணவர்களுக்கு அவர்களுடைய அனுமதி தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் நடவடிக்கையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சார்பில் மானிய ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஈடுபட்டுள்ளார்.

பல்கலைக்கழக அனுமதி பெற்றும் பல்கலைக்கழக கல்வியை தொடர முடியாத மாணவர்கள் இருப்பின் அவர்களுக்கான உதவிகளை மேற்கொள்ள முடியும் எனவும் வேறு பிரச்சினைகள் இருப்பினும் அது தொடர்பான நடவடிக்டிகை எடுக்க முடியுமெனவும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார். (4)

## துப்பாக்கிச் சூட்டில் தம்புள்ளவில் ஆறு பேர் காயம்

தம்புள்ள, நாவுல, தம்பகொல்லாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர் என நாவுலப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது அயல் வீட்டுக்காரர்களால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் கர்ப்பிணித் தாய் ஒருவரும் அடங்குகிறார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## நாரந்தனையில் சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 26

நாரந்தனை, சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிமணிய சுவாமி தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் பெருந்திருவிழாவை ஒட்டி சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபெற்ற விரும்புபவர்களை நாளை புதன்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (1)

## நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 26

இலங்கை நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2007 (2009) எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் இடம்பெறவுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை 111 தரத்திற்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை யாழ்.மத்திய கல்லுரியில் இடம்பெறும்.

எதிர்வரும் சனிக்கிழமை பொது நிர்வாகமும், நிதி ஒழுங்கு விதிகளும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை விடய ஆய்வு (CASE STUDY) பரீட்சையும் இடம் பெறும்.

இப்பரீட்சையில் 540க்கு மேற்பட்டோர் தோற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-95)

# 9 ஆயிரத்து 100 விடுதலைப் புலிகள் இதுவரை படையினரிடம் சரண்

## இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, மே 26

இதுவரை 9 ஆயிரத்து 100 விடுதலைப் புலிகள் படையினரிடம் சரணடைந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

இவர்களில் 7 ஆயிரத்து 237 பேர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதில் ஆயிரத்து 601 பேர் பெண்கள் எனவும் இவர்களில் 80 பெண்கள் உட்பட 202 பேர் நலன்புரி நிலையங்களில் இருந்து தம்மிடம் சரணடைந்தனர் என்றும் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2 ஆயிரத்து 379 புலிகள் பொதுமக்களுக்கிடையில் தங்கியிருந்தபோது அடையாளம் காணப்பட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை 22 ஆயிரம் விடுதலைப் புலிகளைப் படையினர் கொன்றுவிட்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

படைத்தரப்பில் 6 ஆயிரத்து 261பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 29 ஆயிரத்து 551 பேர் உடல் அங்கங்களை இழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவர்களில் 2 ஆயிரத்து 556 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் அத்துமீறல்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் சில நீக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைக் கவுன்ஸிலில் இன்று முன்வைக்கப்படவுள்ள இலங்கை குறித்த பிரேரணையில் மிகச் சிறிதளவு விடயங்களே இடம்பெற்றுள்ளன என ஐக்கிய நாடுகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹிலெல் நியுயோர் தெரிவித் துள்ளார்.

''இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெறுகின்றனவா எனக் கண்டறிவதற்காக சர்வதேச விசாரணைகள் இடம்பெறவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கின்றபோதிலும், இலங்கை அரசையே இது குறித்து சுயமாக விசாரணை செய்யுமாறு உத்தேச தீர்மானம் கோருகின்றது. இது வேடிக்கையானது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இன்றைய பிரேரணையில் இலங்கை அரசை அதன் செயல்களுக்காகக் கண்டிக்கும் வாசகங்கள் கைவிடப்பட்டு, அதற்கு மாறாக அரசின் ஒத்துழைப்பிற்காகப் பாராட்டுத் தெரிவிக்கப்பட் டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலின் பொதுக் கருத்தைப் பெறுவதற்காக ஆவணங்களில் முக்கிய விடயங்களை அகற்றுவது மேலும் மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

''2006 இல் ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் உலகின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பியிருக்கும். ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பாற்றியிருக்கலாம். எனினும் அந்தப் பிரேரணையும் அழுத்தம் காரணமாகக் கைவிடப்பட்டது'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

# ஐ.நாவையும் செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் அரசிடம் கேட்டுக்கொண்டார்.



எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணில் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

1980 ஆம் ஆண்டிலிருந்து வளரத் தொடங்கிய புலிப் பயங் கரவாதத்தைத் தோற் கடிப்பதற்கு அன்று முதல் இன்று வரை இந்த நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் பல்வேறு நடவடிக் கைகளை எடுத்தனர்.

இப்போது மஹிந்த ராஜபக்ஷ புலிப் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துள்ளார். இதற்கான அர்ப்பணிப்பைச் செய்த எமது முப் படையினர், பொலிஸார் ஆகியோருக்கு நாம் எமது கௌரவத்தைத் தெரிவிக் கின்றோம்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியதைத் தொடர்ந்து எமக்கு ஏற்பட்டிருக்கும் அடுத்த பிரச்சினை வன்னியை அபிவிருத்தி செய்வதும் வவுனியா அகதி முகாம்களில் உள்ள அகதிகளை மீளக் குடியமர்த்துவதுமாகும்.

இந்த வருட இறுதிக்குள் 80 முதல் 90 வீதம் வரையிலான மக்களை மீளக் குடியமர்த்தி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை.

வன்னியை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் ஐ.நா. அமைப்புகள் போன்றவற்றின் உதவிகள் பெறப்பட வேண்டும். இந்த அமைப்புக்கள் வன்னிக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அதேபோல் தற்போது அகதி முகாம்களில் உள்ள மக்கள் பல்வேறுபட்ட தேவைகளை எதிர்நோக்கியுள்ளனர். அவர்கள் அடிப்படை வசதிகள் எவையுமின்றி துன்பப்படுகின்றனர். இந்தப் பிரச்சினை உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைத்து இன மக்களையும் ஒற்றுமைப்படுத்துவது மிக அவசியம். இந்தப் பணியைச் செய்வதற்கும் அகதிகளின் நலனை மேம்படுத்துவதற்கும் நாம் தயாராகவிருக்கின்றோம். எமது இந்த உதவியைப் பெறுவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்க வேண்டும்.

நாம் அரசியல் விடயங்களில் வேறுபட்டு நிற்கலாம். ஆனால், அகதிகளின்விடயத்தில் நாம் அனைவரும் குறிப்பாக ஆளுங் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களிடம் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டு சர்வதேசத்தின் ஆதரவுடன் சமாதானத்தை எட்டுக!

## அரசை வலியுறுத்துகிறார் சொல்ஹெய்ம்



கொழும்பு, மே 26

தமிழர்கள் தொடர்பாகப் பெருந்தன் மையுடன் நடந்துகொண்டு அவர்களை உள்ளடக்கிய தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும். சமாதானத்தை அடைவதற்கு அரசியல் தீர்வு மிக முக்கியமானதாகும்.

- இவ்வாறு நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

'ஸ்பைகெல்' சஞ்சிகைக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அந்த செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தொடர்ச்சியாக என்னுடன் தொடர்புபட்டிருந்த பலர் வன்முறை மூலம் இறந்தது நெருக்கடியான ஒரு விடயம். இதன் காரணமாக நாம் கவலையும் துக்கமும் அடைகின்றோம்.

### புலித்தேவன் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன

இம்மாதம் 17ஆம் திகதி நள்ளிரவுவரை இரு தரப்புகளுடனும் நான் தொடர்பிலிருந்தேன். புலித்தேவனுடன் நேரடித் தொடர்பில் இருந்தேன். அவர் அரசியல் தலைவர்கள் சரணடைய விரும்புகின்றனர் என என்னிடம் தெரிவித்தார். அந்த வேளையில் துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டன.

சகல வழிகளிலும் இலங்கை அரசுடனும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருடனும் தொடர்புகொண்டோம். விடுதலைப் புலிகள் சர்வதேசத்தின் உதவியை நாடினார்கள்.

மோதல் இடம்பெற்றுள்ள பகுதிகளிலிருந்து தகவல்கள் வருவது முழுமையாகத் தடைப்பட்டிருந்ததால், அங்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என உடனடியாகச் சொல்லமுடியாதுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட வழியில் கையளித்திருந்தால் சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க உதவியாக இருந்திருக்கும்.

### தமிழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டவேண்டும்

இலங்கை அரசு தமிழ் மக்களை நோக்கி - நேசக்கரங்களை நீட்டி - அவர்களை அரவணைத்து ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதன் மூலமே பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக் காணமுடியும். இது அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது.

தமிழர்களை அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிப் பாடுபடுமாறும், உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியல் வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

அரசு சமாதானத்தையும் தமிழ் மக்களின் மனங்களையும் தன்னால் வெல்ல முடியும் என்பதைக் காட்டவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதில் சர்வதேச சமூகம் முக்கிய பணியாற்ற வேண்டும். அரசு நலன்புரி முகாம்களுக்கும்,யுத்தக் கைதிகளிடமும், மோதல் இடம்பெற்ற இடங்களுக்கும் மனிதாபிமான அமைப்புக்கள் செல்வதற்கு அனுமதிக்கும்வரை சர்வதேச சமூகம் இதற்கான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

### அரசு சொல்வதை எல்லாம் நான் நம்புகிறேன் என்பதல்ல

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும், ஐ.நாவும் தொடர்ந்து நிலைமையைக் கண்காணிக்கவேண்டும். அத்துடன், ஊடகவியலாளர்களைக் குறித்த இடங்களுக்குச் செல்ல அரசு அனுமதிக்கவேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களின் உரிமை மற்றும் அவர்களின் மனிதாபிமான நிலை குறித்தே நோர்வே வெளிவிவகார அமைச்சு தற்போது கவலை கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அமைப்பின் தலைவர் பிரபாகரனும் நானும் மிக நெருங்கிப் பழகியுள்ளோம். அவர் இறந்துவிட்டார் என்றே நான் நினைக்கிறேன். என்றாலும், அரசு சொல்வதையெல்லாம் நான் நம்புகிறேன் என்று அர்த்தமில்லை - என்றார். (அ-சி)

## இந்தியா ஆயுதம் தர மறுத்ததால் சீனா, ரஷ்யாவிடம் வாங்கினோம்

### இராணுவத் தளபதி சொல்கிறார்

கொழும்பு, மே 26

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் முக்கிய தருணத்தில் இந்தியா ஆயுதங்களை வழங்க மறுத்ததால் சீனாவிடமிருந்து தாங்கள் ஆயுதங்களைப் பெற்றனர் என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இந்தியாவின் என்.டி. ரீ.வி. தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

தங்களால் தாக்குதல் ஆயுதங்களையோ அல்லது ராடர்கள், தொலைத்தொடர்புக் கருவிகள் போன்றவற்றையோ தரமுடியாது என இந்தியா தெரிவித்தது. அதனால் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியை நாடவேண்டியிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

''இஸ்லாமாபாத்தினால் எமது தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய முடியாததால் நாங்கள் ரஷ்யா, உக்ரைன் போன்ற நாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற வேண்டியிருந்தது. இதற்கு அதிக விலை செலுத்தவேண்டியிருந்தது'' எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, மே 26

நாட்டில் தற்போது நிலவுகின்ற மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் சில நாள்களுக்குத் தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் சில தினங்களுக்கு நாட்டின் பல பிரதேசங்களில் மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் காலநிலை விஞ்ஞானி பி.ஜயக்கொடி தெரிவித்தார்.

அதன்படி, சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்யலாம் என அவர் மேலும் தெரிவித்தார். நீர்த்தேக்கங்களை அண்மித்த பிரதேசங்களிலும் மழை பெய்து வருவதால் மின்சாரத் தட்டுப்பாட்டுப் பிரச்சினையும் முடிவுக்கு வரலாமென அவர் மேலும் குறிப்பட்டார். (சி)

## இலங்கையில் வடபகுதியில் வழமைநிலை திரும்பியதும் திரும்பிச் செல்லுமாறு அகதிகள் கேட்கப்படுவர்

### அமைச்சர் சிதம்பரம் கூறுகிறார்

புதுடில்லி, மே 26

இலங்கையின் வடபகுதியில் வழமை நிலை சகஜநிலை திரும்பியதும், தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் இலங்கைக்குத் திரும்பிச் செல்லுமாறு கோரப்படுவார்கள் என்று இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவையில் மீண்டும் உள்துறை அமைச்சராக நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்ட சிதம்பரம், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டதால், அங்கு இயல்பு நிலை திரும்பும் நிலையில், தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்களா என்று செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த சிதம்பரம், சகஜநிலை திரும்பினால், சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல அகதிகளே ஆர்வமாக இருப்பார்கள் என்றும், இலங்கையில் இயல்பு நிலை திரும்பும்போது, அகதிகள் கண்டிப்பாகத் திரும்பிச் செல்வார்கள் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் கொல்லப்பட்டது தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் வெளிவருவது குறித்த கேள்விக்குப் பதிலளிக்கையில், இலங்கை அரசே அதை உறுதிப் படுத்திவிட்ட நிலையில், பிரபாகரன் மரணம் தொடர்பாக ஐயப்பாடுகளை எழுப்பத் தேவை யில்லை என்று கூறினார்.

தமிழகக் கடலோரப் பகுதிகள் வழியாக விடுதலைப் புலிகள் ஊடுருவ வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்விக்கு பதிலளித்த சிதம்பரம்-

அது தொடர்பாக, தமிழக அரசுக்கு உரிய அறிவுறுத்தல் களை மத்திய அரசு வழங்கியிருப் பதாகவும், மாநில அரசும் அதை ஏற்று பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத் தியிருப்பதால், ஊடுருவல் நடைபெற வாய்ப்பில்லை என்று தெரிவித்தார். (அ)

---

### யாழ்.மாநகர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்த வன்னிப் பிரதேசத்தை அண்மித்துள்ள யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பத்து வருடங்களுக்கும் அதிகமான காலத்தின் பின்னர் இந்த உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன என்று அவதானிகள் தெரிவித்தனர். (அ-1-சி)

---

### சரணடையக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் பல்வேறு நபர்கள் மூலம் பல இடங்களில் சரணடைகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நபர்கள் தமக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது இராணுவ முகாம்களில் மட்டுமே சரணடைய வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-சி)

---

### புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் கடத்தல்களை பத்மநாதன் மேற்கொண்டு வந்தார். இப்போதைய இந்த நிலையில், இலங்கை அரசு அவரைக் கைது செய்யமுடியாது எனக் குறிப்பிட்ட அமைச்சர், அவரைக் கைதுசெய்யுமாறு அரசின் சார்பில் இன்டர்போலிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (அ-சி)

---

### பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதால் பாதுகாப்புக் குறித்துக் கவலைப்படத் தேவையில்லையென நான் அவரிடம் தெரிவித்தேன்.

ஐ.நாவின் மனிதாபிமானப் பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதால் இலங்கையில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி தரவேண்டும் என நான் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டேன்'' - என்றார். (அ-சி)

---

### விடுதலைப் புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்துயிர் பெறுவதற்கு ஒரு போதும் இடம் அளிக்கப்படமாட்டாது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

அரசாங்கத்தின் செய்தி அகத்துக்கு இந்த மேற்குறிப்பிட்ட கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

விடுதலைப் புலிகள் இயக்கம் சட்டவிரோதமான அமைப்பாகும். எனவே, அவ்வமைப்புடன் இயங்கும் துணைக் குழுக்களுக்கு எதிராக சர்வதேச சமூகம் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் இலங்கையில் பணியாற்றிய தொண்டு நிறுவனங்கள் இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பதை விடுத்து, விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டன.

அந்த அமைப்புகளின் உண்மையான நோக்கங்களை அறிந்து அரசு அவற்றுக்கு சரியான பதிலடியைக் கொடுத்து விட்டது. அத்துடன் ஜனாதிபதிக்கும், பாதுகாப்புச் செயலாளரான எனக்கும், முப்படைத் தளபதிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுகிறது. சர்வதேச போர்க் குற்றம் தொடர்பாகப் பாதுகாப்புச் செயலாளர் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என அறிக்கைகள் விடப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளின் துணைக் குழுக்களால் விடுக்கப்படும் இந்த அறிக்கைகள் குறித்து நான் அச்சமடையவில்லை - என்றார்.

நாட்டின் ஊடாக சுதந்திரத்தை ஒரு போதும் சீர்குலைக்கவோ, கட்டுப்படுத்தவோ மாட்டோம்.

பாதுகாப்புப் படையினரிடம் இதுவரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடைந்துள்ளனர். அவர்களில் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதியானோருக்கு புனர்வாழ்வு வழங்கப்படும் -என்றார். (அ)

Take an easy step towards your Management Degree path

For Whom:- For senior and middle level executives in public and private sector organizations dealing with Business Management & Marketing.

(12 Months) B.Sc (Hons) in Business IT
(12 Months) HND in Business Management
(6 Months) Adv.Dip. in Business Management
(6 Months) Dip. in Business Management

புதிய பிரிவுகள் ஆரம்பம் வார நாள்:- 27-05-2009 வார இறுதி நாள்:- 30-05-2009

IDM 216, Navalar Road, Jaffna. Thavady Road, Manipay. Kodikamam Road, Nelliyady. Tel.No : 021 2229901

கற்சுமி வெளியீடு

* தரம் 1,2,3,4,5, கணிதம் நுண்ணறிவு வினாத்தாள்கள்
* தரம் 6 - 11கணிதபாட வினாத்தாள்கள்

வெளிவந்துவிட்டன

உங்கள் வழமையான முகவரிடம் பெறலாம்

கற்சுமி, நாவலர் வீதி, யாழ்

கணினிகள் விற்பனைக்கு

குறுகியகாலம் பாவித்த தரமான கணினிகள் (P4) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779184529

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

நற்சிந்தனை

"கல்விக்காக எதையும் தியாகம் செய் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே!"

க.பொ.த.உயர்தர

கல்விச்சுடர்



26.05.2009 (14) செவ்வாய்க்கிழமை

Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்

கல்வி இணைப்பிதழ்


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்

General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

**வணிகக்கல்வி - 01** நேரம் - 1மணித்தியாலம்

## பகுதி-1

01. தேவை, விருப்பம் என்பன தொடர்பில் மிகப்பொருத்தமான கூற்று,
    1) சந்தைப்படுத்துவோரால் தேவை, விருப்பங்களை உருவாக்க முடியும்.
    2) தேவை, விருப்பம் என்பன மனித வாழ்வுக்கு மிக அவசியமானவை.
    3) தேவை, விருப்பம் ஆகிய இரண்டும் கொள்வனவு ஆற்றலால் நிர்ணயிக்கப்படும்.
    4) தேவை, விருப்பம் என்பன மனித வாழ்வுக்கு மிக அவசியமானவை அல்ல.
    5) தேவை குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் விருப்பமாக மாறலாம்.

02. உற்பத்தி என்பதன் சரியான கருத்து,
    1) மூலப்பொருளை முடிவுப்பொருளாக மாற்றுவது.
    2) மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காகச் சந்தைக்குச் சமர்ப்பிக்கப்படும் எதுவும்.
    3) ஏற்கனவே பெறுமதியுள்ள பொருளின் பெறுமதியை அதிகரித்தல்.
    4) ஏற்கனவே பெறுமதியில்லாத பொருளுக்கு பெறுமதி ஏற்படுத்தல்.
    5) உள்ளீட்டை வெளியீடாக மாற்றுதல்.

03. வணிக இடர் தொடர்பான தவறான கூற்று,
    1) இணைந்து முதலீடு செய்வதன் மூலம் இடர்களைப் பரவலாக்கலாம்.
    2) எல்லா இடர்களையும் எதிர்கொள்ளல்.
    3) அதிக இடர்களை எதிர்கொண்டு அதிக இலாபம் பெறுதல்.
    4) முகாமையாளரும், ஊழியர்களும் அதிக இடர்களை ஏற்றல்.
    5) ஊழியர்களும், முயற்சியாளர்களும் அதிக இடர்களை ஏற்றல்.

04. குறித்த நிறுவனத்தால் கட்டுப்படுத்தமுடியாத ஆனால், இலங்கை மத்தியவங்கியால் கட்டுப்படுத்தக்கூடிய பேரினச் சூழல்,
    1) தொழில்நுட்பச் சூழல். 2) மக்கட்சூழல்.
    3) பூகோளச்சூழல். 4) பொருளியல் சூழல்.
    5) அரசியல் சட்டச் சூழல்.

05. தொழில் முயற்சிகளுக்கு அரசு வழங்கும் வசதிகளில் அடங்காதது,
    1) நிறுவன ரீதியான வசதிகள். 2) உட்கட்டமைப்பு வசதிகள்.
    3) வேலைவாய்ப்பு வசதிகள். 4) வரி நிவாரணங்கள்.
    5) நிதி வசதிகள்.

06. உலக நாடுகள் அனைத்தும் எதிர்கொள்ளும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை,
    1) அதிகரிக்கும் வறுமை. 2) சூழல் மாசடைதல்.
    3) போர்ச்சூழலுக்கு அதிகளவு பணம் செலவிடப்படல்.
    4) பெருமளவு பணம் ஆடம்பரப் பொருட்களுக்குப் பயன்படுத்தப்படல்.
    5) புவியின் அருமையான வளங்களின் மிகையான உபயோகம்.

07. விற்பனையாளர் வழங்கும் கழிவுகளில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் கொள்வனவாளர் பெற்றுக்கொள்ளத் தயங்கும் கழிவுவகை,
    1) காசுக் கழிவு. 2) கணியக் கழிவு.
    3) வியாபாரக் கழிவு. 4) பருவகாலக் கழிவு.
    5) திரண்ட கணியக் கழிவு.

08. பின்வரும் ஆவணங்கள் பயன்படுத்தப்படும் ஒழுங்குமுறைகளைக் காட்டுவது,
    அ - கட்டளைப் பத்திரம். ஆ - கூறுவிலைப் பத்திரம்.
    இ - விலைவிசாரணை. ஈ - மாதிரிப்பட்டியல்.
    1) ஈ, இ, அ, ஆ. 2) அ, ஆ, இ, ஈ.
    3) இ, ஆ, ஈ, அ. 4) இ, ஆ, அ, ஈ.
    5) அ, ஆ, ஈ, இ.

09. வலையமைப்புக்களின் வலையமைப்பு எனப்படுவது,
    1) இலத்திரனியல் அஞ்சல். 2) வெப்தளம்.
    3) இணையம். 4) உள்ளக வலையமைப்பு.
    5) பெரும்பரப்பு வலையமைப்பு.

10. ஒரு நிறுவனம் வணிகத் தொழிற்பாட்டிலிருந்து விலகிச்செல்வதற்கான காரணமாக அமைவது
    1) பலமும், பலவீனமும். 2) வாய்ப்பும், அச்சுறுத்தலும்.
    3) பலமும், அச்சுறுத்தலும். 4) வாய்ப்பும், பலவீனமும்.
    5) பலவீனமும், அச்சுறுத்தலும்.

11. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உருவாகுவதற்காக ஒன்றிணைக்கப்பட்ட அமைப்புக்கள்,
    1) உள்நாட்டு வியாபாரத் திணைக்களமும், நியாய வியாபார ஆணைக்குழுவும்.
    2) நியாய வியாபார ஆணைக்குழுவும், விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும்.
    3) சுகாதாரத் திணைக்களமும், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கமும்.
    4) விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கமும்.
    5) பாவனையாளர் அலுவல்கள் சபையும், நியாய வியாபார ஆணைக்குழுவும்.

12. HACCP சான்றிதழ் வழங்கும் நோக்கத்தை ஒத்ததாக I.S.O வினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரநியமம்,
    1) I.S.O, 14000 2) I.S.O 9000
    3) I.S.O 22000 4) I.S.O 14001
    5) I.S.O 14024

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

13. பணத்தின் பண்பாகக் கருதமுடியாதது,
    1) போலிகளை உருவாக்க முடியாததாக இருத்தல்.
    2) காவிச்செல்லக்கூடியதாக இருத்தல்.
    3) இனங்காணக்கூடியதாக இருத்தல்.
    4) பெறுமான அளவுகோலாக இருத்தல்.
    5) சிறுசிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல்.

14. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் தொழிற்பாடாகக் கருதமுடியாதது,
    1) அன்னியச்செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல்.
    2) நடைமுறைக் கணக்கைப் பேணுதல்.
    3) வதிவற்றோர் சேமிப்பு வைப்புக்களை ஏற்றல்.
    4) நிலையான சேமிப்பு வைப்புக்களை ஏற்றல்.
    5) நாட்டின் அபிவிருத்தி நோக்கம் கருதி கடன் வழங்குதல்.

15. அரசு, அரசாங்க வரிவருமானங்கள் அரச மானியங்கள், அரசாங்கச் செலவுகள் போன்ற செயற்பாடுகள் தொடர்பான அரச பொருளாதாரக் கொள்கைமுறை அழைக்கப்படுவது,
    1) நாணயக்கொள்கை. 2) இறைக்கொள்கை.
    3) சர்வதேச வர்த்தகக் கொள்கை. 4) நாணயமாற்றுவீதக் கொள்கை.
    5) சென்மதி நிலுவைக் கொள்கை.

### ★ ★ ★ இவ்வார இணைப்பிதழில்...

- வணிகக்கல்வி 01 இன் பகுதி1,பகுதி 11 வினாத்தாள் ( கொ.தமிழ்ச்சங்கம் )
- பொருளியல் 01 இன் பகுதி 11 வினாத்தாள் ( கொ.தமிழ்ச்சங்கம் )
- பௌதிகவியல் 01 இன் பகுதி 1 வினாத்தாள் ( கொ.தமிழ்ச்சங்கம் )
- கணக்கீடு 01 இன் பகுதி 11 வினாத்தாள் ( கொ.தமிழ்ச்சங்கம் )

16. பங்குதாரர் ஒருவர் உடன்பட்ட தொகைக்கேற்ப நட்டப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வணிக அமைப்பு,
    1) வரையறுக்கப்பட்ட சொந்தக் கம்பனி.
    2) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி
    3) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி.
    4) பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்.
    5) கரைகடந்த கம்பனி.

17. ஒருபொதுக்கம்பனி வர்த்தக வங்கிகளில் இருந்து குறுங்காலக் கடன்களைப்பெறுவதைத் தவிர்ப்பதற்காக வெளியீடு செய்யக்கூடிய ஆவணம்,
    1) பங்காணைப்பத்திரம்.
    2) பங்குப்பத்திரம்.
    3) வர்த்தகப்பத்திரம்.
    4) பங்குலாபப் பத்திரம்.
    5) பங்குரிமைப்பத்திரம்.

18. இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர் தொடர்பான பிரச்சினைகளில் சம்பளம் தொடர்பான விடயங்களைக் கையாளும் அமைப்பு,
    1) தேசிய கூட்டுறவுச்சபை.
    2) கூட்டுறவுத் திணைக்களம்.
    3) கூட்டுறவு முகாமைச்சேவை நிறுவனம்.
    4) கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழு.
    5) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.


★ உங்கள் அபிமான

உதயன்

கல்விச்சுடர் வழங்கும்

உயர்தர மாணவர்களுக்கான துயார்ப்படுத்தல் வினாத்தாள்கள்

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் மாதிரி வினாத்தாள்கள் யாழ் மாணவர்களின் நலன் கருதி

உங்கள் அபிமான கல்விச் சுடரில் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில். வெளிவருகின்றன.

உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள உதயன் முகவரிடம் இன்றே முற்பதிவு செய்யவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 0714273035 / 0716850005


19. மோட்டார் வாகனக் காப்புறுதியில் அடுத்துவரும் வருடத்திற்குரிய தவணைக்கட்டணத்தில் கழிவைப் பெறுவதற்குக் காப்புறுதியாளனுக்கு அனுமதிக்கப்படும் வசதி,
    1) வருடாந்த உபகாரப்பணம். 2) நட்டஈட்டுக் கொடுப்பனவு.
    3) ஈடுகோரா மிகையூதியம். 4) கருணைக் கொடுப்பனவு.
    5) ஒப்படைப்புக் கொடுப்பனவு.

20. பின்வரும் பணியாளர்களில் அறிவுமட்ட ஊழியர்களாகக் கருதப்படக்கூடியவர்,
    1) ஆசிரியர்கள். 2) எழுதுவினைஞர்கள்.
    3) கணக்காளர்கள். 4) பொறியியலாளர்கள்.
    5) கணக்காய்வாளர்கள்.

*** 21-30 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்குக.**

21. இலங்கை அரசாங்கத்தின் பிரதான வருமான மூலமாகக் கருதப்படுவது ................................ ஆகும்.

22. அண்மையில் தனியார் பேரூந்து ஊழியர் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறை ........................................ ஆகும்.

23. வெளியீட்டுக் கருவிகளில் (Printer) மிக உயர்தரமாகக் கருதப்படுவது................................ ஆகும்.

24. தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியின் சதவீதம் ................................ ஆகும்.

25. பயணிகள் பேரூந்துகளுக்குரிய பாதை அனுமதிப்பத்திரத்தினை ................................ வழங்குகின்றது.

26. சக்தித் தரவரிசை சான்றுப்படுத்தல் திட்டத்தை ................................ நிறுவனமும், ................................ இணைந்து அமுல்படுத்துகின்றது.

27. தொழிற்பிரிவின் காரணமாகக் குறித்த தொழிலில் ஒருவர் பெற்றுக்கொள்ளும் சிறப்புத்தேர்ச்சி ................................ ஆகும்.

28. இலங்கையில் இணையச்சேவை வழங்கும் நிறுவனங்கள் ................................ ................................ ஆகும்.

29. இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான நோக்கம், ................................

30. ஆகாயவிமானத்தின் மூலம் பொருட்களை எடுத்துச்செல்லப் பயன்படும் ஆவணம் ................................ ஆகும்.

*** 31-40 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

31. இலங்கையில் காணப்படும் பிரபல்யமான அங்கீகார வணிக நிறுவனங்கள்

32. இலங்கையில் உள்ள கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஆய்வுகூட வசதிகளை வழங்கும் இரு பிரதான அரச நிறுவனங்களைக் குறிப்பிடுக.

33. 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிச்சட்டத்தின்படி கூட்டிணைக்கப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பனி ஆண்டிற்குரிய பங்குலாபத்தினைப் பகிர்வதற்கு முன்னர் கம்பனிப் பதி

தொடர்ச்சி பக்கம் 11 இல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் பக்கத்தொடர்ச்சி ....

வாளர்களுக்கு சமர்ப்பிக்கவேண்டிய ஆவணம் ..........................................

34. அரசாங்க ஆவணங்களின் கொடுக்கல்வாங்கல் தொடர்பாகப் பின்பற்றப்படும் ''லங்கா செட்டில்'' (Lanka Settle) முறைமையின் இரு பிரிவுகளும் எவை?
1) .......................................... 2) ..........................................

35. இலங்கையின் தனியார்துறை தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாளும் பிரதான நிறுவனம் யாது?
..........................................................................................................
..........................................................................................................

36. ஆயுட்காப்புறுதியின் மீது செல்வாக்குச் செலுத்தும் இரு பிரதான தத்துவங்கள் யாவை?
1) .......................................... 2) ..........................................

37. மொத்த, சில்லறை வியாபாரம், சுற்றுலா பேரன்றன மத்திய வங்கியின் பாகுபாட்டின் அடிப்படையில் .......................................... பிரிவினுள் உள்ளடக்கப்படும்.

38. வேலைவாய்ப்பு வழங்குதல், வருமானச் சமமின்மையைக் குறைத்தல், சிக்கனமான வளப் பிரயோகம் போன்றவை வணிகத்தின் .......................................... சார்ந்த பொறுப்பாக உள்ளடக்கப்படும்.

39. தொலைத்தொடர்பினூடாக சர்வதேச மட்டத்தில் வங்கிகளுக்கிடையில் இடம்பெறும் பணக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான வலைப்பின்னல் .......................................... எனப் படும்.

40. I.S.O 9001 - 2001 ISO .........................................., .........................................., .......................................... ஆகிய மூன்று நியமங்கள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட நியமங்கள்.

**(40 புள்ளிகள்)**

## பகுதி-11

## நேரம்: 2 மணித்தியாலம்

* **இல. 1ஆம், 2ஆம் வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. 1) உற்பத்தியை துறைரீதியாக விளக்கி, ஒரு லீற்றர் பால் போத்தல் உமது வீடு வரை கிடைப்பதை எவ்வாறு இத்துறை ரீதியான தொழிற்பாடு வெளிப்படுத்துகின்றது என விளக்குக.
2) வணிகங்கள் ஏன் நிலைத்திருக்கின்றன?
3) பொருளாதார சூழல் என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது? வணிக தொழிற்பாட்டிற்கு இப்பொருளாதாரச் சூழல் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது.
4) தெளிவான இலக்கு வ.ிகங்களின் குறிக்கோளை அடைவதற்கு எவ்வகையில் உதவுகின்றது என விளக்குக.
5) வரையறையற்ற பொறுப்பு என்ற பதத்தை விளக்கி, அது எவ்வாறு சிறியளவு வணிகங்களுக்கு பிரதிகூலமாக அமையும் என்பதை விளக்குக.
6) பின்வரும் எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.
அ. தனியார் மயமாக்கல், தேசிய மயமாக்கல்.
ஆ. பணக்கொள்கையும், நிதிக்கொள்கையும்.
இ. நுகர்வோர் உரிமையும், நுகர்வோர் பொறுப்பும்.

02. 1) ''அநேக வணிக நிறுவனங்கள் திறனற்ற தொடர்பாடல் முறைகளால் பாதிப்படைகின்றது'' சிறப்பான தொடர்பாடலுக்குள்ள தடைகளை பட்டியல்படுத்துக.
2) ''பிரதிமை'' அடிப்படையிலான காசோலை தீர்ப்பனவு முறை எனப்படுவது யாது? இதன் மூலம் வாடிக்கையாளர் அடையும் நன்மை யாது?
3) பொதுவாக தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ள வேண்டிய காப்புறுதி கொள்கைகளையும் (Insurance) அவை ஒவ்வொன்றிலும் உள்ளடக்கப்பட்டவேண்டிய விடயங்கள் ஒவ்வொன்றினையும் குறிப்பிடுக.
4) போக்குவரத்தில் காணப்படும் வாகன நெரிசல்களை தவிர்ப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?
5) சார்பு நலன் கோட்பாட்டிற்கு ஒப்பிட்டு நலன் கோட்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.
6) வலையமைப்பு (Network) என்றால் என்ன? வலையமைப்பு வசதியை பெற்றுக் கொள்ள தேவைப்படும் விடயங்கள் எவை?

03. 1) ''வணிக நோக்கம் இலாபமீட்டுதல் மட்டுமல்ல'' இக்கூற்றுக்கு நீர் உடன்படுகிறீரா? காரணம் தருக.
2) ஒரு வணிக அமைப்பில் காணப்படும் முகாமையாளர், ஊழியர், பங்குதாரர்கள் வேறுபட்ட நோக்கங்களை கொண்டு காணப்படுவர். இவ்வேறுபாடு எவ்வாறு முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்பதை விளக்குக.
3) அ. பின்வருவன அடிப்படையில் தனியார் துறை, பொதுத்துறை நிறுவனங்களை வேறுபடுத்தி காட்டுக.
   1. உரிமையும் கட்டுப்பாடும்.
   2. போட்டி.
   3. ஊக்கிவிப்பு.
   4. நிதி.

ஆ) தனி பங்குதாரர் கம்பனி என்பதனால் விளங்கிக்கொள்வது யாது?
4) வியாபாரி ஒருவரின் எத்தகைய நடவடிக்கைகள் நுகர்வோர் அலுவலக அதிகார சபை சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

**நன்றி: மாகாணக் கல்வித்திணைக்கவம், கொழும்பு தமிழ்ச்சங்கம்**

04. 1) ''கொழும்பு நகர் பகுதிகளில் கழிவுகளை அகற்றுதல் ஒரு பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது'' இப்பிரச்சனையை தீர்பபதற்கு சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி என்ற முறையில் நீர் கூறும் ஆலோசனைகள் எவை?
2) அ. அரச பிணைகள் எவ்வடிவங்களில் காணப்படுகின்றது.
ஆ. இவற்றுள் எது இலங்கை ரூபா வடிவத்தில் காணப்படாத பத்திரமாகும்.
3) நாணய பெறுமதியேற்றம். நாணய பெறுமதி இறக்கம் என்பவற்றிற் கிடையிலான வேறுபாட்டினை உதாரணம் மூலம் விளக்குக.
4) கையடக்க தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள கூடிய நவீன வசதிகள் மூன்றினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

05. 1) குத்தகை முறைக்கும் வாடகை கொள்வனவு முறைக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.
2) கீழே தரப்பட்ட விநியோக முறையின் மூலம் உற்பத்தியாளர் ஒருவருக்கு காணப்படும் அநுகூலங்கள் யாவை?
உற்பத்தியாளர் - மொத்த வியாபாரி - சில்லறை வியாபாரி - நுகர்வோர்.
3) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தொழிற்பாடுகள் மூன்றினை விளக்குக.
4) சிறுகுறிப்பு எழுதுக.
அ. அண்மிய காரணி.
ஆ. காப்புறுதி செய்யமுடியாத நட்ட அச்சம்.
இ. ஒப்புறுதி

06. 1) நுகர்வோர் சில தெரிவு செய்த சில்லறை வியாபார நிலையங்களை நாடிச்செல்வதற்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.
2) சர்வதேச வர்த்தக கொடுக்கல்வாங்கலில் இலத்திரனியல் கொடுப்பனவு முறையின் பயன்பாடு அதிகளவில் அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்கள் யாவை?
3) அ. உற்பத்தி நாட்டு சான்றிதழ் என்பதன் பொருள் யாது?
ஆ இவ் உற்பத்தி நாட்டு சான்றிதழ் மூலம் இறக்குமதியாளர் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்கள் யாவை?
4) சிறுகுறிப்பு எழுதுக.
அ. குரல் அஞ்சல்.
ஆ. வர்த்தக ஒப்பந்தம்.
இ. முற்பண அட்டை.

**நிறைவு பெற்றது**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August
மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

# பொருளியல் 01

**நேரம்:2மணித்தியாலம்**

## பகுதி - 11

பிரிவு 'அ' விலிருந்து இருவினாக்களையும் பிரவு 'ஆ' விலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### பகுதி 'அ'

01. 1) சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்வதற்கான காரணங்கள் எவை?
2) சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றிய இன்றைய வல்லரசு நாடுகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குவதற்கான காரணங்கள் இரண்டினைத் தருக.
3) சந்தைப் பொருளாதாரத்தில் தோன்றும் வெளிவாரியின் தோல்விகளைச் சரிப்படுத்த இலங்கை அரசு எத்தகைய வழிமுறைகளைக்கையாளலாம்?
(15 புள்ளிகள்)

02. 1) கீழ்க்காணும் அட்டவணையைப் பயன்படுத்தி உற்பத்தி சாத்திய வளையிக்கான சமன்பாடு ஒன்றினைப் பெறுக.

| x பொருள் | y பொருள் |
|---|---|
| 20 | 80 |
| 30 | 40 |

2) இச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி உற்பத்தி சாத்திய வளையி ஒன்றினை வரைக.
3) இவ்விரு பொருட்களினதும், உத்தம உற்பத்திகள் யாவை?
4) இவ்வளையியின் வடிவத்திற்கான காரணங்களைக் கூறுக.
5) x பண்டத்தில் 75 அலகுகளும், y பண்டத்தில் 150 அலகுகளும் நுகரவேண்டுமாயின் யாது நிகழவேண்டும்.
(15 புள்ளிகள்)

03. $90 - 10p = QD$, $QS = 20p$ எனும் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளைக் கொண்டு கீழே தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.
1) சமநிலை விலை, சமநிலைத் தொகை யாது? (4 புள்ளி)
2) அரசு ரூபா இரண்டினை (2/=) மொத்தவரியாக விதிக்கும் போது உற்பத்தியாளருக்கான வரிவருமானம் யாது? (4 புள்ளி)
3) அரசின் மொத்தவரி வருமானம் யாது? (3 புள்ளி)
4) நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (3 புள்ளி)

04. 1) நிறை போட்டிச் சந்தையின் பிரதான பண்புகள் யாவை?
2) தனியுரிமைப் போட்டி நிறுவனம் ஒன்றின் கேள்விக் கோட்டிற்கும், நிறைப் போட்டி நிறுவனம் ஒன்றின் கேள்விக்கோட்டிற்குமிடையிலான வேறுபாட்டை விளக்குக.
3) போட்டி சந்தையொன்றில் விற்கப்படும் பண்டமொன்றின் உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் காணப்படுவதன் விளைவுகளை வரைபடம் மூலம் விளக்குக.
(15 புள்ளிகள்)

### பிரிவு 'ஆ'

05. 1) பேரினப் பொருளாதாரம் என்றால் என்ன? வரையறை செய்க
2) பேரினப் பொருளாதார இயக்கிகள் (துறைகள்) யாவை?
3) வீட்டுத்துறையின் பொருளாதார செயற்பாடுகள் யாவை?
(15 புள்ளிகள்)

06. 1) தேசியக் கணக்கீட்டில் இடம்பெறக்கூடிய இரட்டைக் கணிப்பீடு என்றால் என்ன? அதனை நீக்குவதற்கான வழிவகைகள் யாவை?
2) பொருளாதாரமொன்றின் தேசியவருமானம் தொடர்பான பின்வரும் கணக்கீட்டுத் தரவுகள் தரப்படுகின்றன.

| | (மில்லியன் ரூபாவில்) |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவு | 35,000 |
| பொது நுகர்வுச் செலவு | 12,000 |
| மொத்த முதலீடு | 15,000 |
| இருப்புக்களின் மாற்றம் | 300 |
| தேறிய ஏற்றுமதிகள் | ( 3,000) |
| இறக்குமதிகள் | 12,000 |
| வெளிநாட்டு தேறிய காரணிவருமானங்கள் | ( 1,000) |
| வெளிநாட்டு தேறிய மாற்றல்கள் | 4,000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
a. மொத்த தேசிய உற்பத்தி (4 புள்ளி)
b. செலவிடக்கூடிய மொத்த தேசிய உற்பத்தி (3 புள்ளி)
c. சென்மதிநிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதி (3 புள்ளி)

07. ''2007 இல் மொத்தப்படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 12.6% ஆல் அதிகரித்து''
1) பொதுப்படுகடன் சேவைவீதம் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது? (3 புள்ளி)
2) அரசபடுகடன் அதிகரிப்பிற்கான காரணங்கள் யாவை? (5 புள்ளி)
3) அதிகரிக்கப்பட்ட முறிகளினால் பெறப்பட்ட நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பொருளாதார செயற்திட்டங்கள் எவை? (7 புள்ளி)

08. 1) நல்ல வரிமுறை ஒன்றின் முக்கிய பண்புகள் எவை?
2) அரசிறையின் அதிகரித்துச் செல்லும் போக்கினை வலுவுறச் செய்வதற்காக அரசாங்கம் அண்மையில் அறிமுகப்படுத்திய வழிமுறைகள் எவை?
3) பொருளாதார இலக்குகளை அடைவதற்கு இறைக் கொள்கையை எவ்வாறு பயன்படுத்தலாம்?
(15 புள்ளிகள்)

**நிறைவு பெற்றது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்**
**General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August**

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்


# பௌதிகவியல் - 01

## பகுதி - 1

01. வில் மாறிலி kஐ யுடைய இலேசான வில் ஒன்றிலிருந்து தொங்கவிடப்பட்ட திணிவு m ஆனது அதிர்வு மீடிறன் f ஆனது. $f = Cm^x k^y$ என்னும் தொடர்புடைமையால் தரப்படுகிறது. C பரிமாணமற்ற மாறிலி x, y முறையே,
1) -1/2, -1/2 2) -1/2, 1/2 3) 1/2, -1/2
4) 1/2, 1/2 5) 5 -1, -1


02. கனக்குற்றி ஒன்றின் பக்கநீளத்தை அளப்பதன் மூலமும், திணிவை காண்பதன் மூலமும் அதன் அடர்த்தி கணிக்கப்பட்டது. நீளம் அளத்தலில் ஏற்படும் உயர்வழு 2% திணிவில் ஏற்படும் உயர்வழு 3% ஆயின், அடர்த்தி அளத்தலில் ஏற்படும் உயர்வழு யாது?
1) 1% 2) 3% 3) 5%
4) 7% 5) 9%

03.




படத்தில் காட்டப்பட்டுள்ளது வேணியர் இடுக்குமானியின் ஆரம்ப நிலையாகும். இக்கருவி மூலம் பெற்ற வாசிப்பு 6.45mm ஆயின், சரியான வாசிப்பு யாது?
1) 7.15mm 2) 7.15cm 3) 0.57mm
4) 5.75mm 5) 0.70mm

04. 50 பொட்டுகள்/ செக் (Hz) உடன் அதிரும் அதிரி ஒன்றின் கீழ் வைக்கப்பட்ட திக்கிடை நாடா மாறாக்கதியில் இயக்கப்பட்டபோது பெறப்பட்ட பதிவு கீழே தரப்படுகிறது.





மாறாக்கதியின் பெறுமானம் பின்வருவனவற்றுள் எது?
1) 2.0cm/s 2) 5.0cm/s 3) 100cm/s
4) 200cm/s 5) 10cm/s

05. துணிக்கை ஒன்று ஓய்விலிருந்து புறப்பட்டு சீரான ஆர்முடுகலுடன் இயங்குகின்றது. இயக்கத்தின் nஆம் செக்கனில் சென்ற தூரத்திற்கும், n செக்கனில் சென்ற தூரத்திற்கும் உள்ள விகிதம்,
1) $1/n - 2/n^2$ 2) $1/n + 2/n^2$ 3) $2/n - 1/n^2$
4) $2/n + 1/n^2$ 5) $1/n + 1/n^2$


06. தரைக்குமேல் 9m உயரத்தில் புள்ளி ஒன்றிலிருந்து நிலைக்குத்தாக மேல் நோக்கி $12ms^{-1}$ வேகத்துடன் எறியும் பொருள் மீண்டும் தரையை அடைய எடுக்கும் நேரம்,
1) 3/5s 2) 3s 3) 5/3s
4) 5s 5) 9/5s

07.




இரண்டு துணிக்கைகள் P, Q என்ற புள்ளிகளிலிருந்து கிடையுடன் முறையே 30°, 60°இல் முறையே என்ற வேகங்களுடன் ஒரே நேரத்தில் எதிர்திசையில் எறியப்பட்டன. இரண்டுக்கும் இடையிலுள்ள கிடைத்தூரம் பூச்சியமாவதற்கு எடுக்கும் நேரம்,
1) t = x/2u 2) t = 2x/u 3) 3x/2u
4) t = x/u 5) 2/3 + x/u


08. மெல்லிய சீரான கோல் ஒன்று அதன் மேல் முனை இழையினால் நிலைத்த புள்ளிக்குக் கட்டப்பட்டுள்ளது. அதன் கீழ்முனை நீரில் தொங்குகின்றது. சமநிலையில் கோலின் அரைப்பங்கு நீரில் அமிழ்ந்துள்ளது. எனில் கோல் ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் அடர்த்தி,
1) $250kgm^{-3}$ 2) $500kgm^{-3}$ 3) $750kgm^{-3}$
4) $1000kgm^{-3}$ 5) $1250kgm^{-3}$



09. பின்வரும் எந்த ஒன்றை பேணூலியின் கோட்பாட்டைப் பயன்படுத்தி விளக்கமுடியாது?
1) விசிறும் பம்பியின் செயற்பாடு.
2) பன்சன் சுடரடுப்பின் செயற்பாடு.
3) காற்று ஊதப்பட்ட பலூன் மேல் எழுதல்.
4) நீண்ட புகைபோக்கி ஒன்றினூடு புகை மேலெழுதல்.
5) இறங்கிக்கொண்டு வளியில் இயங்கும் பந்தின் பாதை வளைவானது.

10. நீரியல் உயர்த்தியின் சிறிய உருளைப்பகுதியின் விட்டம் $d_1$cm, பெரிய முசலப்பகுதியின் விட்டம் $d_2$cm. சிறிய முசலத்தில் $F_1$ விசை பிரயோகிக்கப்பட்ட பெரிய முசலத்தின் $F_2$ஆகக் கிடைக்கும் எனின்,
1) $F_2 = d_2^2/d_1^2 F1$ 2) $F_2 = d_1^2/d_2^2 F_1$ 3) $F2 = d_2^2/d_1^2 1/F_1$
4) $F_2 = d_2/d_1 F_1$ 5) $F_2 = 1/d_1^2 d_2^2 F_1$


11.




$A_1, A_2, A_3, A_4$ குறுக்குவெட்டுப் பரப்புகளை உடைய குழாயில் பாயும் திரவத்தின் வேகங்கள் முறையே $V_1, V_2, V_3, V_4$. அமுக்கங்கள் முறையே $P_1, P_2, P_3, P_4$ எனில்,
1) $P_1 = P_2 = P_3 = P_4$ 2) $P_1 > P_2 > P_3 > P_4$ 3) $P_1 = P_2 = P_3 > P_4$
4) $P_1 > P_4 > P_3 > P_2$ 5) $P_2 > P_3 > P_4 > P_1$


12. ஒரு மரக்குற்றி ஆனது நீரில் அதன் கனவளவில் 2/3 பங்கும், திரவத்தில் 9/10 பங்கும் அமிழ்ந்திருக்க மிதக்கின்றது. திரவத்தின் அடர்த்தி அண்ணளவாக $kgm^{-3}$ இல்,
1) 670 2) 974 3) 900
4) 740 5) 820

13.




வளிமண்டல அமுக்கம் 760mmHg எனில், P இனுள் அமுக்கம் mmHh இல்,
1) 740 2) 780 3) 760
4) 20 5) 0

14. m திணிவுடைய படகு சுமை m ஐக் காவுகின்றது. m உடன் படகு அமிழும் கனவளவு V மாறுபடுவதைக் காட்டும் வரைபு,




15. உதைபந்தாட்டப்போட்டி ஒன்றின் நடுவர் தனது சீழ்க்கையை ஊதிக்கொண்டு $5ms^{-1}$ சீரான வேகத்துடன் ஓடுகின்றார். அவர் ஓடும் பாதைக்கு அண்மையாக ஓய்வில் நிற்கும் ஒருவர் கேட்கும் சீழ்க்கை ஒலியின் மீடிறன் $f_1$ இலிருந்து $f_2$ ஆக மாறுகின்றது. வளியில் ஒலியின் கதி $330ms^{-1}$ ஆகும். $f_1 = 335Hz$ எனின், $f_1$ இன் பெறுமானமாக அமைவது,
1) 315Hz 2) 320Hz 3) 325Hz
4) 330Hz 5) 335H


16. ஈர்க்கப்பட்ட 32cm நீள இழை ஒன்று 600Hz அடிப்படை மீடிறனுக்கு இசைவாக்கப்பட்டு உள்ளது. அடிப்படைச் சுரத்தின் மீடிறனை 120 Hzஆல் குறைப்பதற்கு இழையின் நீளத்தை எவ்வளவால் அதிகரிக்கவேண்டும்?
1) 4cm 2) 8cm 3) 16cm
4) 32cm 5) 64cm

17. ஒருமுனை மூடிய 50cm நீளமான குழாய் ஒன்றின் திணிவு ஒருமுனையில் மாறும் மீடிறன் ஒலிமுதல் ஒன்று வைக்கப்பட்டு அதன் தாழ்ந்த பெறுமானத்திலிருந்து படிப்படியாக உயர்த்தப்படுகின்றது. மீடிறன் 165Hz ஆகும்போது குழாயில் உள்ள வளி பரிவுறுகின்றது எனின், வளியில் ஒலியின் வேகம் யாது?
1) $165ms^{-1}$ 2) $300ms^{-1}$ 3) $330ms^{-1}$
4) $340ms^{-1}$ 5) $350ms^{-1}$


18. பின்வரும் மின்காந்த அலைகளின் மீடிறன்களின் ஏறுவரிசையாக அமைவது,
A. கட்புல ஒளி.
B. அதியுயர் மீடிறன் (VHF) தொலைக்காட்சி அலைகள்.
C. கதியுயர் மீடிறன் (UHF) தொலைக்காட்சி அலைகள்.
D. மீடிறன் மட்டிசைந்த (FM) றேடியோ அலைகள்.
1) D, B, C, A 2) D, C, B, A 3) A, B, C, D
4) A, C, D, B 5) D, A, C, B

19. நிலையான அவதானியை நோக்கி அசையும் ஒலிமுதல் ஒன்றினால் எழுப்பப்படும் ஒலியின் மீடிறன் அவ் அவதானிக்கும் உண்மையான மீடிறனின் இருமடங்காக இருந்தது. வளியில் ஒலியின் வேகம் C எனின், ஒலிமுதலின் வேகம்,
1) C 2) C/2 3) C/5
4) C/11 5) C/13

20. மாறா வெப்பநிலையில் அதிகரிக்கும் அமுக்கத்துடன் ஒலியின் வேகம் மாறும் வரைபு,




21. ஒரு மெல்லிய தளவாடி மீது h உயரமுடைய கண்ணாடிக்குற்றி உள்ளதை உரு காட்டுகின்றது. இக் கண்ணாடிக் குற்றியினுள் தளவாடிப் பரப்பிலிருந்து 3cm தூரத்தில் உள்ள புள்ளிப்பொருள் ஒன்றின் விம்பத்தை நிலைக்குத்தாக நோக்கும் நபருக்கு கண்ணாடி-தளவாடி பரப்பில் இருக்கக் காணப்பட்டது. கண்ணாடியின் முறிவுச்சுட்டி 1.5 எனின், h இன் பெறுமானம்,
1) 4cm
2) 6cm
3) 8cm
4) 9cm
5) 12cm




22. பார்வைக்குறைபாடு உடைய ஒருவரின் அண்மைப்புள்ளி 0.5m ஆகும். அண்மைப் புள்ளியை 25cm இற்குக் கொண்டுவருவதற்கு அவர் பயன்படுத்தவேண்டிய வில்லையின் வலு,
1) 2D 2) 1D 3) 0.5D
4) 0.75D 5) 2.5D

23. ஒரு வானியல் தொலைக்காட்டி இயல்பான செப்பஞ்செய்கையில் இருக்கின்றது. பொருளின் மீது படும் ஒளிக்கற்றையின் விட்டம் d எனில், தொலைக்காட்டியின் கோணப்பெரிதாக்கம் (கோண உருப்பெருக்கம்) m எனில், வெளிப்படும் கற்றையின் விட்டம்,
1) d/m 2) dm 3) d(m+1)
4) 2d/m 5) d/2m

24. அரியத்தின் ஊடாகச் செல்லும் ஒளி பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. அரியத்தின் ஊடாகச் செல்லும்போது ஒளியின் மீடிறன் மாறுகின்றது.
B. பல்வேறு நிறங்களைக்கொண்ட ஒளி அரியத்தினுள்ளே வெவ்வேறு கதிகளில் செல்கின்றது.
C. அரியத்தின் ஊடாகச் செல்லும்போது நீல ஒளி செவ்வொளியிலும் பார்க்கக் கூடுதலாக விலகலுறுகின்றது.
மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களில்,
1) C மாத்திரம் உண்மையானது.
2) A, B ஆகியன மாத்திரம் உண்மையானவை.
3) B, C ஆகியன மாத்திரம் உண்மையானவை.
4) A, C ஆகியன மாத்திரம் உண்மையானவை.
5) A, B, C ஆகிய எல்லாம் உண்மையானவை.

தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரி வினாத்தாள்

# கணக்கீடு- 01

நேரம் - 2 மணித்தியாலம்

## பகுதி-11

* **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. அபியும், ஆதியும் சட்டப்படியான பங்குடைமை ஒன்றில் ஈடுபட்டு வந்தனர். இதில் 1 ஏப்ரில் 2007இல் பாஸ்கர் புதிய பங்காளராக சேர்க்கப்பட்டார். புதிய உடன்பாடுகள் வருமாறு:-
1) இலாப நட்டவிகிதம் முறையே 2/4, 1/4, 1/4
2) ஒவ்வொரு பங்காளருக்கும் ஆண்டுக்கு ரூபா 18,000/= சம்பளம் உரித்தாக்கப்படும்.
3) மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டி வழங்கப்படும்.
4) புதிய பங்காளர் அனுமதி தொடர்பான சீராக்கங்கள் செய்ய முன்னர் 31 மார்ச் 2008இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு:-

| | | |
|---|---|---|
| காணி கட்டடம் (கட்டடம் 300,000) | 680,000 | |
| பொறித்தொகுதி | 300,000 | |
| மோட்டார் தொகுதி | 200,000 | |
| 01.04.07இல் தேய்வு ஏற்பாடுகள் | | |
| - கட்டடம் | | 30,000 |
| - பொறித்தொகுதி | | 40,000 |
| - மோட்டார் வாகனம் | | 50,000 |
| 01.04.07இல் இருப்புக்கள் - திரவியப் பொருட்கள் | 180,000 | |
| - புத்துருவாகும் வேலை | 50,000 | |
| - பூர்த்திப்பொருட்கள் | 300,000 | |
| வாடகை வரிகள் | 30,000 | |
| சம்பளம் கூலிகள் | 180,000 | |
| மின்சாரம் | 24,000 | |
| திரவியப் பொருள் கொள்வனவு | 420,000 | |
| வெளித்திரும்பல் | | 10,000 |
| அனுமதிக்கப்பட்ட கழிவுகள் | 6,000 | |
| நன்மதிப்பு | 50,000 | |
| கடன்பட்டோர் | 290,000 | |
| கடன்கொடுத்தோர் | | 250,000 |
| தொழிற்சாலை பராமரிப்பு | 30,000 | |
| தொழிற்சாலை மேற்பார்வை செலவு | 70,000 | |
| உள்முகக் காவுகை | 26,000 | |
| வெளிமுகக் காவுகை | 34,000 | |
| 10% வங்கிக்கடன் (ச..ச வங்கி) | | 500,000 |
| மூலதனக் கணக்குகள் - அபி | | 800,000 |
| - ஆதி | | 600,000 |
| பாஸ்கர் கொண்டுவந்த பணம் (மூலதனம், நன்மதிப்பு) | | 620,000 |
| நடைமுறைக் கணக்கு மீதி - அபி | 60,000 | |
| - ஆதி | | 100,000 |
| வங்கிமீதி | 50,000 | |
| காசு மீதி | 18,000 | |
| சில்லறைக் காசு மீதி | 2,000 | |
| | 3,000,0000 | 3,000,000 |

**மேலதிக தகவல்கள்:**

1. 31 மார்ச் 2008இல் இருப்புகள்

| | கிரயம் | தேறிய தேறத்தக்க பெறுமதி |
|---|---|---|
| திரவியப் பொருட்கள் | 200,000 | 190,000 |
| பூர்த்திப்பொருட்கள் | 300,000 | 320,000 |
| புத்துருவாகும் வேலை | 40,000 | - |

2. பாஸ்கரை புதிய பங்காளராக சேர்க்கும் பொருட்டு பின்வரும் விடயங்களில் உடன் பட்டனர்.
அ. சொத்துக்கள் சில பின்வருமாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டது
காணி கட்டடம் 690,000/= பொறி தொகுதி 250,000/=
மோட்டார் வாகனம் 145,000/= பூர்த்திப்பொருள் இருப்பு 290,000/=

ஆ. நன்மதிப்பு 80,000/= என மதிப்பீடு செய்யப்பட்டதுடன் கணக்குப் புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கை பேணுவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

3. நடைமுறை அல்லா சொத்துக்களின் மறுமதிப்பீட்டு பெறுமதியில் கட்டத்திற்கு 5% மும், பொறி மோட்டார் வாகனங்களுக்கு 10% மும்பெறுமானத் தேய்விட வேண்டும்
4. கடைசி மாத வாடகை வரி 2,000/=, மின்சாரப் பட்டியல் 1,000/= நிலுவையாகக் காணப்பட்டது. வாடகை வரி மின்சாரம் செலவுகள் முறையே தொழிற்சாலைக்கு 60% மும் அலுவலகத்திற்கு 40% மும் பங்கீடு செய்யப்படல் வேண்டும்.
5. சம்பளம் கூலிக்கணக்கில் ஒவ்வொரு பங்காளருக்குமான செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,000/=படியான பங்காளர் சம்பளமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சம்பளம் கூலியானது நேர் 50% நேரில் 30% அலுவலகத்திற்கு 20% பங்கீடு செய்யப்பட வேண்டும்.
6. வங்கிக் கடனானது 1யூலை 2007இல் பெறப்பட்டது இதற்கான வட்டி நிலுவையாக உள்ளது.

**உம்மிடம் வேண்டப்படுவது.**
1) பங்காளர் மீள் மதிப்பீட்டுக் கணக்கு.
2) பங்காளர் மூலதனக் கணக்கு.
3) 31.03.2008இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி வியாபார இலாபநட்டக் கணக்கு.
4) பங்காளர் நடைமுறைக்கணக்கு.
5) 31.03.08இல் உள்ளபடியான ஐந்தொகை. ( 20 புள்ளிகள்)

02. பசில் நிறுவனத்தின் 01.01.2008இல் காணப்பட்ட நிலுவைகள்.

| | |
|---|---|
| காணி கட்டடம் | 400,000 |
| மோட்டார் | 400,000 |
| மோட்டார் பெறுதேய்வு ஏற்பாடு | 100,000 |
| கையிருப்பு | 260,000 |
| கடன்பட்டோர் | 30,000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 3,000 |
| வங்கி | 250,000 |
| கடன் கொடுத்தோர் | 40,000 |

உமக்கு பின்வரும் சமன்பாடு தரப்படுகின்றது.
மூலதனம் + (வருமானம் - செலவு) + பரிப்பு = சொத்துகள்
ஜனவரி மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள்.

1) வரையறுத்த தம்ரோ நிறுவனத்தின் தவணைக் கொள்வனவு முறையில் 30,000இற்கு தள பாடங்கள் வாங்கப்பட்டு முதல் தவணைப்பணமாக ரூபா 10,000/= செலுத்தப்பட்டது.
2) ரூபா 240,000/= கிரயமான பண்டங்கள் ரூபா 300,000/= இற்கு காசிற்கு விற்கப்பட்டது.
3) செயற்பாட்டு செலவு காசாக செலுத்தியது ரூபா 3,000/= செலுத்தவேண்டியது 1,000/=
4) சாமியினால் ரூபா 10,000/=இற்கு வாங்கப்பட்ட பண்டங்களில் ரூபா 8,000/= கிரயமான பண்டங்கள் திருப்பியனுப்பப்பட்டன.
5) கடன்பட்டோரிடம் பெற்றகாசு ரூபா 25,000/=
6) நிறுவனம் கடன்பட்டோரில் குறித்த வீதத்தை ஐயக்கடன் ஏற்பாடாக பேணுவதுவழக்கம்.

**வேண்டப்படுவது:-**
1. தரப்பட்ட கணக்கீட்டு சமன்பாட்டில் ஆரம்ப மீதியைப் பதிக.
2. கொடுக்கல்வாங்கல் விளைவுகளை சமன்பாட்டில் பதிந்து காட்டுக. ( 10 புள்ளிகள்)

03. வரையறுத்த பாரதி நிறுவனமானது 31.12.08இல் தமது முடிவுக் கணக்குகளை தயாரித்த போது தேறிய இலாபமாக ரூபா 180,000/=வை காட்டியது. எனினும், ஐந்தொயைில் தொங்கல் கணக்கு மீதி ஒன்று காணப்பட்டது. உள்ளகக் கணக்காய்வின்போது பின்வரும் வழுக்கள் காணப்பட்டன.
1) கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 1,500/=ஆல் மிகையாக கூட்டப் பட்டிருந்தது.
2) காசேட்டு செலவுப்பக்க கழிவு நிரல் ரூபா 300/= உரிய கணக்குகளில் பதியப்பட வில்லை.
3) குறித்த நிதியாண்டில் பதிவளிக்கப்பட்ட ரூபா 500/= அறவிடமுடியாக் கடனாது மீளப் பெறப்பட்டது காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
4) உமா திருப்பியனுப்பிய சரக்கு ரூபா 1,000/= வெளித்திரும்பலாக பதியப்பட்டிருந்தது.
5) கட்டடத் திருத்தம் ரூபா 40,000/= கட்டடக்கணக்கில் பதியப்பட்டிருந்தது. (கட்டடப் பெறுமானத்தேய்வு 10% ஆகும்)
6) நிறுவனம் கட்டுப்பாட்டுக் கணக்கை பேணுகின்றது எனக்கொண்டு பின்வருவன வற்றைத் தயாரிக்குக.
1. நாட்குறிப்பு பதிவு.
2. சரியான இலாபகூற்று.
3. தொங்கல் கணக்கு. ( 10 புள்ளிகள்)

04. மகிந்த நிறுவனத்தின் 2008 ஜனவரி மாத வங்கிக்கூற்று மீதி ரூபா 20,500/=வை மேலதிக பற்றாகக் காட்டியது. காசேட்டு வங்கிமீதி பிறிதோர் மீதியைக் காட்டியது.
1) வரைந்த போதும் இன்னும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாதவை.
0065431 - ரூபா 12,000/=
0065435 - ரூபா 6,000/=
2) வைப்புச் செய்யப்பட்டு தீர்வையாகாத காசோலைகள்
1234567 - ரூபா 25,000/=
2468334 - ரூபா 37,000/=
3) நிலையான கட்டளையின் பேரில் பெற்ற பங்குலாபம் ரூபா 3,000/=
செலுத்திய வாடகை ரூபா 5,000/=
4) காசேட்டு பெறுவனவு பக்க கூட்டல் ரூபா 2,500/=வால் குறைத்து கூட்டப்பட்டது.

**வேண்டப்படுவது:-**
1. சீராக்கிய காசேடு.
2. வங்கிக் கணக்கிணக்க கூற்று. (5 புள்ளிகள்)

ஆ. நயன் நிறுவனத்தின் நடவடிக்கைகள்

| பெயர் | ஆரம்ப மீதி | கடன் விற்பனை | பெற்ற காசு காசோலை | கழிவு | அறிவிட முடி.கடன் | உட்திரும்பல் |
|---|---|---|---|---|---|---|
| விஜய் | 30,000 | 45,000 | 50,000 | 3,000 | - | 2,000 |
| சிம்பு | 25,000 | 30,000 | 19,000 | 1,000 | 2,000 | - |
| அசின் | 40,000 | 60,000 | 58,000 | 2,000 | - | 5,000 |
| திரிசா | 18,000 | 32,000 | 40,000 | 1,000 | 1,000 | - |

**மேலதிக தகவல்கள்**

1. சிம்புவிடமிருந்து பெற்ற காசோலை மறுக்கப்பட்டதனால் கழிவு இரத்து செய்யப் பட்டது.
2. விஜயின் விற்பனைப்பட்டியல் பெறுமானம் ரூபா 5,000/=இனால் குறைந்து கூட்டப் பட்டது.

**வேண்டப்படுவது:**
பொதுப் பேரேட்டில் பொருத்தமான சீராக்கங்களுடன் கட்டுப்பாட்டுக் கணக்கைத்தயாரிக்குக. ( 5 புள்ளிகள்)

05. 1.1.09இல் பந்தயம் என்பவர் தனது ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெற்ற ரூபா 50,000/=வையும் மைத்துனரிடமிருந்து பெற்ற ரூபா 20,000/=வையும் பெற்று சில்லறை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். இவர் முறையான கணக்கேடுகள் எவற்றையும் பேண வில்லை. கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-
1) பண்டக்கொள்வனவு காசு ரூபா 68,000/= கடன் கொள்வனவு ரூபா 18,000/=
2) விற்பனை ரூபா 80,000/= இதில் 80% கடன் விற்பனையாகும்.
3) சிங்கர் தளபாடக் கம்பனியிடம் தளபாடக் கொள்வனவு ரூபா 10,000/=
4) வெளித்திரும்பல் ரூபா 1,000/=
5) உட்திரும்பல் ரூபா 2,000/=
6) கடன்பட்டோரிடமிருந்து 5% கழிவு நீக்கி பெற்ற காசு ரூபா 38,000/= ஆகும்.
7) கடன்கொடுத்தோருக்கு 1,000/= கழிவு பெற்று ரூபா 15,000/=வுக்கு கணக்கு முடிக்கப் பட்டது.
8) செயற்பாட்டுச் செலவு ரூபா 3,000/= செலுத்தப்பட்டது.

**மேலதிக தகவல்கள்.**
1. நடைமுறையல்ல சொத்திற்கு 10% தேய்விடல்.
2. அட்டுறு செயற்பாட்டுச் செலவு 1,000/=
3. மைத்துனருக்கு 5% வட்டி செலுத்தப்படல் வேண்டும்.
4. நிறுவனமானது கிரயத்தில் 20% இலாபம் வைத்து விற்பனை செய்வது வழக்கம்.

**வேண்டப்படுவது:-**
1. வியாபார இலாபநட்டக்கணக்கு.
2. ஐந்தொகை ( 10 புள்ளிகள்)

06. உல்லாசம் சனசமூக நிலையத்தின் பொருளாளர் சுகவீனமுற்று இருந்ததினால் அனுபவமற்ற பொருளாளரினால் தயாரிக்கப்பட்ட வருமான செலவுக்கணக்கு வருமாறு:-
31.12.08இல் உள்ளவாறான வருமானச் செலவுக் கணக்கு வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மீதி | | 61,500 | காகிதாதி.கொடுப்பனவு | 21,600 | |
| பெற்றவட்டி | | 30,000 | + இறுதி இருப்பு | 2,400 | 24,000 |
| (1.1.08 முதல் | | | கொடுத்த சம்பளம் | | 124,800 |
| இருந்த 15% 400,000 = முதலீட்டிற்காக) | | | தொலைபேசிக்கட்டணம் | | |
| | | | செலுத்தியது | 6,000 | |
| பெற்ற சந்தாப்பணம் | | | 2007ஆம் ஆண்டு நிலுவை | 900 | 6,900 |
| - 2007 | 2,400 | | மீதி/ சென்றது | | 98,000 |
| - 2008 | 135,000 | | | | |
| - 2009 | 4,800 | 1,42,200 | | | |
| நன்கொடை | | 20,000 | | | |
| | | 253,700 | | | 253,700 |

**மேலதிக தகவல்கள்.**
1) 31.12.08இல் தொலைபேசிக் கட்டண நிலுவை ரூபா 7,500/=
2) 31.12.08இல் சந்தா நிலுவை ரூபா 6,000/=
3) 31.12.07இல் கட்டடத்தின் பெறுமதி ரூபா 6[illegible]0,000/=இற்கு 5% தேய்விடுக.
4) கழகம் இவ்வருடம் ரூபா 20,000/= பெறுமதியான நன்கொடையினை புலமைப்பரிசில் நிதிவழங்கும் நோக்கில் பெற்றுக்கொண்டது.

மேற்கூறிய தகவல்களை அடிப்படையாகக்கொண்டு,
1. கணக்குத் தயாரிக்கப்பட்டிருப்பது தொடர்பாக இனங்காணக்கூடிய பிழையான தகவல்களை குறிப்பிடுக.
2. திருந்தமான முடிவுக் கணக்குகளை தயாரிக்குக.
( 10 புள்ளிகள்)

**நிறைவுபெற்றது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org